# நாடாளுமன்ற மக்கள் அவை பொதுத் தேர்தல் - 2009

## அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கை

## வளமான இந்தியாவிற்கான செயல் திட்டம்

### முன்னுரை

உலகம் முழுவதும் நிலையற்ற தன்மை நிலவும் இந்தத் தருணத்தில் 15ஆவது மக்கள் அவைக்கான தேர்தல் நடைபெற உள்ளது. உண்மையிலேயே உலகப் பொருளாதாரம் அதல பாதாளத்திற்கு சென்றுவிட்டது. அதே வேளையில், கொடூரமான பயங்கரவாத வெறியாட்டங்களும், அவற்றை முறியடிப்பதற்கான விவேகமற்ற நடவடிக்கைகளும் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை பலி கொண்டுள்ளன. மனித சமுதாயத்திற்கு பெரும் அச்சுறுத்தல்களாக உருவெடுத்துள்ள இந்த இரண்டு சவால்களையும் சமாளிப்பதில் உலகத் தலைவர்களும், பொருளாதார நிபுணர்களும், கொள்கை வகுப்பவர்களும் விடாப்பிடியாக ஈடுபட்டுள்ளனர்.

இது போன்ற உலகச் சூழ்நிலையில், தவறான கொள்கைகள், திறனற்ற, உறுதியற்ற ஆட்சி நிர்வாகம், தொலைநோக்கு இல்லாத தலைமை, திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மெத்தனப் போக்கு ஆகியவை மத்தியில் ஆட்சி நடத்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் தரக்குறியீடுகளாக காட்சி அளிக்கின்றன. கடந்த சில ஆண்டுகளாக நீர்க்குமிழி போலக் காணப்பட்ட வளர்ச்சி தற்போது அடியோடு சிதைந்துவிட்டது. கடந்த சில மாதங்களாக உற்பத்தித் துறையில் சரிவு ஏற்பட்டுள்ளது. சேவைத் துறையும் பெரும் சரிவை சந்தித்துள்ளது. லட்சக்கணக்கான மக்கள் வேலையிழந்து தவிக்கின்றனர். வாழ வழியில்லாமல் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் அவலம் தொடர்கதையாகி வருகிறது. பங்குச் சந்தை சீர்குலைந்து போய்விட்டது. பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் மத்திய அரசு அறிவித்துள்ள போதிலும் பணவீக்கம் இதுவரையில் கட்டுப்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்துகொண்டே செல்கிறது.

எந்த நேரத்திலும், எங்கு வேண்டுமானாலும், பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற நிலை நீடிப்பதால் இந்திய நாடு துளிகூட பாதுகாப்பில்லாத நாடாக மாறியுள்ளது. இதைச் சமாளிக்கத் தேவையான நுண்ணறிவையோ, தொழில் நுட்பத்தையோ பெறாமல் நாட்டின் காவல்துறை மேற்கூறிய செயல்களை முறியடிக்கும்

திறமையை இழந்து நிற்கிறது. நாட்டின் எல்லைப் பகுதிகள் அனைத்தும் எதிரிகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளன. ஆனால், தேசப் பாதுகாப்பில் விட்டுக் கொடுக்கும் இயல்பை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கையாண்டு வருகிறது. எதிரிகளின் தாக்குதல்களை எந்த நேரத்திலும் சமாளிக்கும் அளவுக்கு நமது பாதுகாப்புப் படைகள் தயார் நிலையில் இல்லை. ஒரு பக்கம், சட்ட விரோதமாக குடியேறியுள்ள அந்நியர்கள் நமது பொருளாதாரத்தின் உயிர்நாடியை உருக்குலைத்து வருகின்றனர் என்றால், மற்றொரு பக்கம் தேசத்தின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் பயங்கரவாதிகள் திட்டமிட்ட தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

## ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தேசத்தின் சாபக்கேடு - அதன் வறட்டு முழக்கங்கள், வெத்து வேட்டு செயல்பாடுகள்:

கடந்த ஐந்தாண்டு காலமாக, இந்த தேசத்திற்கு ஒரு சாபக்கேடாக அமைந்துவிட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, தனது பொறுப்பற்ற கொள்கைகளின் காரணமாக பிரச்சினைகளை கெட்டிமேளம் கொட்டி இந்தியாவிற்குள் வரவழைத்துக்கொண்டது. உலகமயமாக்கத்தின் மூலம் இந்தியாவிற்கு வரவிருக்கும் தீய விளைவுகளை முன்கூட்டியே கண்டறிந்து காப்பாற்றிக் கொள்ளாமல், அதை திட்டமிட்டு தடுக்க வேண்டும் என்ற பல தலைவர்கள், சிந்தனையாளர்கள், ஆய்வாளர்களின் ஆலோசனையை முற்றிலுமாக புறக்கணித்துவிட்டு, அசட்டுத் துணிவுடன் உலகமயமாக்கல் கொள்கையை பிடிவாதத்துடன் தொடர்ந்து பொறுப்பற்ற முறையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செயல்படுத்தியது. இதன் விளைவு இப்போது உலகமயமாக்கலின் மோசமான பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ள உலகப் பொருளாதாரப் பிணைப்பில் இருந்து துண்டித்துக்கொள்ளவும், விடுவித்துக் கொள்ளவும் இந்தியா முயன்று வருகிறது. இந்த நடவடிக்கையில் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பது அப்பாவி பொது மக்களே.

அரசு புள்ளி விவரங்களை கூர்ந்து கவனிக்கும் போது, உலகமயமாக்கலின் நிகர விளைவின் காரணமாக இந்தியப் பொருளாதார வளர்ச்சி வலுவான நிலையை எட்டியிருந்ததாகக் கூறப்பட்ட போதிலும் அந்நிய செலாவணி கையிருப்பு அதிகமாக குவிந்திருந்த போதும், நாட்டின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்து இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர். வேலைவாய்ப்புகள் வெகுவாகக் குறைந்து வருகின்றன. சமூக நலத் திட்டங்களில் ஐக்கிய முற்போக்குக்

கூட்டணி அரசு பெருமளவிலான பணத்தை செலவிட்டுள்ளதாகத் தெரிவித்தாலும், சர்வதேச அளவிலான மனிதவள மேம்பாட்டு குறியீட்டு அட்டவணையில் இந்தியா தொடர்ந்து அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. உலகப் பணக்காரர்கள் வரிசையில் இந்தியர்கள் இருப்பதாக பெருமையடித்துக் கொண்டாலும், இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம், உலகத்திலேயே ஏழ்மையான மற்றும் மிகவும் வளர்ச்சி அடையாத பின் தங்கிய பகுதிகளைச் சார்ந்த ஆப்பிரிக்க நாடுகளில் காணப்படும் துணை சகாரா பாலைவனம் போன்ற பரிதாபகரமான நிலைமை தான் காணப்படுகிறது. இந்திய நாட்டின் உண்மை நிலையும் இது தான்.

**சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், வறட்டு முழக்கங்களும், வெத்து வேட்டு செயல்பாடுகளும் கொண்டது தான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு!**

**தமிழ் நாட்டில் நிலவும் இரட்டைக் கொடுமை - செயல்படாத மைனாரிட்டி திமுக அரசு - மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையே முற்றிலுமாகத் தொடர்பற்ற நிலை:**

மத்தியில் ஆட்சி செய்யும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் முக்கிய அங்கமாக இடம் பெற்றுள்ள திமுக, 2006ஆம் ஆண்டு தமிழகத்தில் ஒரு மைனாரிட்டி அரசை அமைத்ததன் காரணமாக தமிழக மக்கள் இரண்டுவிதமான கொடுமைகளுக்கு ஆளாகி உள்ளனர். வாய்க்கு வந்தபடி வாரி வழங்கப்பட்ட நிறைவேற்ற முடியாத தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக சொல்லிக்கொண்டு, முந்தைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கண்ணும் கருத்துமாக உருவாக்கப்பட்டிருந்த நிதி வசதியை மைனாரிட்டி திமுக அரசு கண்மூடித்தனமாக விரயம் செய்து சீரழித்துவிட்டது. மேலும், தொடர் மின்வெட்டு, மோசமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஊழல் மலிந்த ஆட்சி நிர்வாகம் ஆகியவற்றால், தொழில்துறை வளர்ச்சியும் உருக்குலைந்துவிட்டது. 2006ஆம் ஆண்டில் இந்தியத் திருநாட்டிற்கே பெருமை சேர்க்கும் வகையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்த தமிழகம், தற்போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏறெடுத்தும் பார்க்காத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. ஏற்கெனவே நாடு சீரழிந்துள்ள நிலையில், சட்டம்–ஒழுங்கு சீரழிவு, வழக்காடும் தொழிலில் பாதிப்பு, மணல் கொள்ளை, நீதிமன்ற வளாகங்களில் படுகொலைகள் நடக்கும் அவலம், ஆளும் அரசின் ஊக்கம் காரணமாக, சட்டத்தை செயல்படுத்த வேண்டிய காவல் துறையினரே தாக்குதல் நடத்துதல் போன்றவை மேலும் வலுப் பெற்றுள்ளன.

தமிழகம் இந்த அளவுக்கு மோசமான சூழ்நிலையில் இருக்கும் போது, இதற்கு முரண்பாடாக மைனாரிட்டி திமுக அரசின் முதலமைச்சரின் குடும்பம் மட்டும் செழித்துக், கொழித்துத், தழைத்தோங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் முக்கிய தொழிற்பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகள் உடனடியாக மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கர்நாடக மாநிலத்துடனான காவேரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையை மைனாரிட்டி திமுக அரசு அபத்தமான முறையில் கையாண்டதால் வேளாண்மைத் துறை, குறிப்பாக காவேரி பாசனப் பகுதியில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பிரச்சினை தொடர்ந்து நீடித்து வருவதால், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், அதன் விளைவாக அவர்கள் உயிரிழப்பதும் தொடர் கதையாக இருந்து வருகிறது. சட்டம், ஒழுங்கு என்பதே இல்லாமல் போய்விட்டது. மாதக் கணக்கில் நீதிமன்றங்கள்கூட தமிழகத்தில் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், தன்னுடைய குடும்பத் தொழில்களைத் தத்தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர போர்க்கோலம் பூண்டுள்ள தமது ஏராளமான குடும்ப உறுப்பினர்களிடையே சமரசத்தை ஏற்படுத்துவதில் நேரத்தை வீணடித்துக் கொண்டு, தனக்கென்ற தனிப்பட்ட மாயமான உலகில் கருணாநிதி வாழ்ந்து வருகிறார்.

**மத்தியிலும் மாநிலத்திலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் மக்களுக்குமிடையே எந்தத் தொடர்புமே இல்லாத தற்போதைய நிலைமையை விடுதலை இந்தியாவின் வரலாற்றில் இதுவரை நாம் கண்டதே இல்லை!**

## புனர் நிர்மாணம் ஒரு கடுமையான சவால் - தொலைநோக்கும், அனுபவமும் மிகுந்த வலிமையான தலைவர் நாட்டிற்கு தேவை

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஒட்டுமொத்த நிர்வாகத்தில் அக்கறையின்மையையும், அலட்சியத்தையும் பின்பற்றிய காரணத்தாலும், ஆபத்தான சூழ்நிலைகளை சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் காரணத்தாலும், நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அடித்தளமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, தன்னுடைய தொடர் நடவடிக்கையின் மூலம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஜாதி, இன அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தி, பல்வேறு குறைபாடுகள் கொண்ட பிளவுபட்ட சமுதாயத்தை உருவாக்கி இருக்கிறது. இதன் விளைவாக, ஒரு சிறு தீப்பொறி ஏற்பட்டாலே ஒட்டுமொத்த தேசமும் வெடித்துச் சிதறக்கூடிய மிகவும் ஆபத்தான நிலை உருவாகியுள்ளது.

இருப்பினும், கட்டுக்கோப்பான நாடாகவும், சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலவரத்தைவிட ஒரு பாதுகாப்பான நிலையிலும் இந்தியா தொடர்ந்து இருந்து வருவதற்குரிய பெருமை சராசரி இந்திய மக்களான விவசாயிகள், ஆசிரியர்கள், மாத ஊதியம் பெறும் பிரிவினர், கைவினைக் கலைஞர்கள், தொழிலாளர்கள், பணியாளர்கள், அரசு ஊழியர்கள், சுய தொழிலில் ஈடுபடுவோர், மாணவ–மாணவியர், மூத்தக் குடிமக்கள், சமூகத் தலைவர்கள், குறிப்பாக இல்லத்தரசிகள் ஆகியோரையே சாரும். **கடந்த ஐந்து ஆண்டுகளாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் எண்ணற்ற இன்னல்களுக்கு எதிராக விடாமுயற்சியுடனும், உறுதியுடனும் போராடி வரும் சாமான்ய மனிதர்களுக்கும் தாய்மார்களுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தலைவணங்குகிறது; அவர்களின் உறுதியை போற்றிப் பாராட்டுகிறது. இந்தியர்களின் செயல்திறனை அபாரமான நிலைக்கு உயர்த்தும் குறிக்கோளுடன் நடைபெறவுள்ள மக்கள் அவை பொதுத் தேர்தலுக்கான இந்தத் தேர்தல் அறிக்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் முன் வைக்கிறது.**

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முறைகேடான ஆட்சி நிர்வாகத்தால் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தனது முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்ளும் உறுதிமொழியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த சந்தர்ப்பத்தில் அளிக்கிறது. மோசமான காலகட்டம் முடிவுற்று, அதிலிருந்து மீளும் தருணம் **இப்போது** நெருங்கிவிட்டது என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்கு உறுதி அளிக்கிறது. **வளமை மிக்க இந்தியாவை உருவாக்கத்** தேவையான வலிமையைப் பெற, வருகின்ற மக்கள் அவை பொதுத் தேர்தலில் அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்த்துகளையும் நல்லாதரவையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கோருகிறது.

**மிகவும் இக்கட்டான தருணங்களில், கடுமையான முடிவுகளை எடுக்க மனஉறுதி படைத்தவர்களால் மட்டுமே முடியும்.** இந்தியாவின் குறிப்பிட்டப் பிரச்சினைகளை அடையாளம் காணும் திறன் படைத்தவராக மட்டுமல்லாமல், தொலைநோக்கு கொண்ட ஒரு தலைவராகவும் திட்டங்கள், கொள்கைகளை முறையாக நடைமுறைப்படுத்தும் திறன் கொண்டவராகவும் விளங்கும் வலிமை படைத்த ஒரு பிரதமரின் தலைமையிலான நிலையான அரசு தான், இந்தியாவின் இன்றையத் தேவை. குறுகிய சிந்தனையிலிருந்து விடுபட்டு, வலுவான

செயல்திட்டத்துடன் களமிறங்கக்கூடிய துடிப்புமிக்க அணி இந்தியாவிற்கு தற்போது மிக அவசியம்.

இன்றைய நெருக்கடியான சர்வதேச சூழ்நிலையை கருத்தில் கொண்டு பார்த்தால், இந்தியாவிற்கு ஒரு வலிமை படைத்த தலைவர் தேவை என்பது காலத்தின் கட்டாயமாக உள்ளது. பன்முகத் தன்மை வாய்ந்த, மாறுபட்ட ஓர் உலகம் உருவெடுத்து வரும் நிலையில் உலக அளவில் தனக்கு உரிய இடத்தை இந்தியா வசப்படுத்திக்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாதது. அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முடங்கிக் கிடக்கும் தற்போதைய நிலையிலிருந்து உலகத்தை வழிநடத்திச் செல்ல இந்தியாவால் முடியும் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆணித்தரமாக நம்புகிறது. தற்போது உருவெடுத்து வரும் உலக அரங்கில் இந்தியாவின் பங்களிப்பு நிச்சயமாக இருக்கும் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது.

## தொலைநோக்குப் பார்வையும், அனுபவமும் வாய்ந்த ஈடு இணையற்ற தலைவர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

நடைபெற உள்ள நாடாளுமன்ற மக்கள் அவை பொதுத் தேர்தலில் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதாவின் வழிகாட்டுதலின் பேரில் தேர்தலைச் சந்திப்பதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெருமிதம் கொள்கிறது. கட்சித் தொண்டர்களாலும், தமிழ் நாட்டு மக்களாலும் அம்மா என்று அன்புடன் போற்றப்படும் கழகப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா, கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக – சரியாக சொல்ல வேண்டுமென்றால் கடந்த 27 வருடங்களுக்கும் மேலாக மாநில அரசியலில் தனிப்பெரும் செல்வாக்குப் பெற்றுள்ள பன்முக ஆளுமைத் திறன் வாய்ந்த தன்னிகரற்றத் தலைவர் என்பதை நாடே அறியும். 1984 ஆம் ஆண்டு முதல், மாநிலங்களவை உறுப்பினராக இருந்ததோடு மட்டுமல்லாமல், ஆட்சி நிர்வாக மதிநுட்பத்தில் தலைசிறந்தவர் என மக்களால் போற்றப்படும் செல்வி ஜெயலலிதா அவர்கள், 1991 முதல் 1996 வரையிலும், 2001 முதல் 2006 வரையிலும் இருமுறை தமிழக முதலமைச்சராக நல்லாட்சி நடத்தினார்.

வயது அடிப்படையில் பார்த்தால், இந்திய நாட்டின் மிகப் பெரிய மாநிலத்தில் இரண்டு முறை முதலமைச்சராக வெற்றிகரமாகப் பணியாற்றிய ஒரே அரசியல்வாதி புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் என்பதோடு மட்டுமல்லாமல்,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இரண்டு முறை எதிர்கட்சித் தலைவராக செயல்பட்டவர். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு பொறுப்புகளில் இருந்து கொண்டு மாநிலத்தை வழிநடத்தி வரும் தலைவராகத் திகழும் செல்வி ஜெயலலிதா அவர்கள், இன்றைய இந்திய அரசியல் வானில் தலைசிறந்தவராகவும், தனிப்பெரும் செல்வாக்குப் படைத்தவராகவும் விளங்குகிறார்.

**இயல்பாகவே தமிழக மக்களின் எதிர்பார்ப்புகள் தெளிவானவை**

ஆட்சி நிர்வாகத்தில் ஆழ்ந்த அனுபவம், அரசியல் மதிநுட்பம், இந்தியாவை முழுமையாக புரிந்துகொண்டுள்ள திறன், அபாரமான தொலைநோக்கு, விவேகமுள்ள தலைமைப் பண்பு ஆகிய ஆற்றல்கள் நிறைந்த கழகப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் வரும் நாட்களில் நம் நாட்டையே வழிநடத்துவதில் முக்கிய பங்கு வகிப்பார் என நாடே எதிர்பார்க்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கு தமிழக மக்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் அடுத்த மத்திய அரசை அமைப்பதில் உறுதியான, திட்டவட்டமான, சக்திவாய்ந்த முடிவெடுக்கக்கூடிய வகையில் முக்கிய பங்கு வகிக்கும் நமது மாநிலத்தைச் சேர்ந்த மாபெரும் தலைவர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு அளிக்கப்படும் வாக்கு என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாக நம்புகிறது.

ஒருமித்த கருத்து கொண்டுள்ள சக்திகளை தேசிய அளவில் ஒருங்கிணைத்து, ஒன்றுபட்டு செயல்பட்டு தமிழக மற்றும் இந்திய மக்களின் விருப்பங்களை முழுமையாக நிறைவேற்றுவதில் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழு முனைப்புடன் செயல்படும்.

## அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமை மிக்க வரலாறு

கடுமையான சோதனைகளையும் தடைகளையும் கடந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.க–வை தோற்றுவித்தார். காலப்போக்கில், நெருக்கமான பாசமும் உறவும் கொண்டுள்ள ஓர் அரசியல் குடும்பமாக தி.மு.க–வை மாற்றினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். தனக்காக சொத்து, சுகம் சேர்த்துக் கொள்வதையோ அல்லது தனக்கும் தனது குடும்பத்தினரின் நலனுக்காகவும் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துவது குறித்தோ அவர் ஒரு போதும் சிந்தித்தது கிடையாது. தமிழர்கள் அனைவரையும் தனது நெருங்கிய சொந்தங்களாக கருதினார். தமிழர்கள் மற்றும்

தமிழகத்தில் வசிக்கும் மக்களின் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டை உறுதிபடுத்திக்கொள்வதற்காக அனைத்து சந்தர்ப்பங்களையும் அதிகாரங்களையும் பயன்படுத்தினார். தனது அரசியல் ஆசான், தந்தை பெரியாருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனிக் கட்சியாக திமுக–வை ஆரம்பித்தபோது கூட, தந்தை பெரியார் மீது அளவுகடந்த மரியாதை கொண்டிருந்ததோடு மட்டுமல்லாமல், கட்சித் தலைவர் பதவியை யாருக்கும் அளிக்காமல், அவருக்கென்று இப்பதவியை ஒதுக்கி வைத்திருந்தார். தி.மு.க–வின் பொதுச் செயலாளர் பதவியை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு பதவிக்கு வந்த கருணாநிதியோ, அண்ணா வகுத்துத் தந்த உயர்ந்த நெறிகளைக் காற்றில் பறக்கவிட்டு, தன்னைத் தானே கட்சித் தலைவராகப் பிரகடனப்படுத்திக்கொண்டார். **பேரறிஞர் அண்ணா அவர்கள் திமுக–வை ஒரு குடும்பமாக மாற்றினார். கருணாநிதியோ இதற்கு நேர்மாறாக, தனது குடும்பம் தான் தி.மு.க. என மாற்றினார்.**

தனது அரசியல் வழிகாட்டி பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்தளித்த கோட்பாடுகளின் அடிப்படையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். 1972 அக்டோபர் 17ஆம் தேதி தொடங்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கென்று மகத்தான ஒரு வரலாற்றை உருவாக்கிக் கொண்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய அதே அமைப்பு முறையை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் பின்பற்றியது. தமிழக மக்களின் அளவுகடந்த அன்பு மற்றும் ஆதரவுடன் புரட்சித் தலைவர் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு சாதனைகளைப் படைத்தது.

தொலைநோக்குத் திறன் படைத்த பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரது லட்சியங்களை கலங்கரை விளக்கமாகக் கொண்டு தமிழக மக்களின் போற்றுதலுக்குரிய மாபெரும் தலைவராக உருவெடுத்திருப்பதோடு மட்டுமல்லாமல் எஃகு உள்ளம் படைத்த தலைவராகவும் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் திகழ்ந்து வருகிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், தமிழகத்தையும், இந்தியத் திருநாட்டையும் வழிநடத்திச் செல்லக் கூடிய தலைமைப் பண்பு மிக்க தலைவர் ஒருவர் தற்போதைய சூழ்நிலையில் தேவை என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று.

இந்நிலையில் 2009ஆம் ஆண்டு நாடாளுமன்ற மக்கள் அவை பொதுத் தேர்தலுக்கான **“வளமான இந்தியாவிற்கான செயல் திட்டம்”** என்ற தேர்தல் அறிக்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மகிழ்ச்சியுடன் மக்கள் முன் வைக்கிறது.

**இந்தத் தேர்தல் அறிக்கையின் மூலம், ஒளிவு மறைவற்ற, குடிமக்களின் உணர்வுகளை மதிக்கக் கூடிய, நேர்மையான, மதச் சார்பற்ற, ஆற்றல் மிக்க நிர்வாகத்தை இந்திய மக்களுக்குத் தர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி அளிக்கிறது.**

## பொருளாதாரம் மற்றும் நிதி நிர்வாகம்

நாட்டின் நிதி நிர்வாகத்தை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அடியோடு சீர்குலைத்துள்ளது. இன்றைய நிதி நிலவரம் அபாயகரமான நிலையில் உள்ளது. 2008-09 ஆம் ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறை 10 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருக்குமெனவும் 2009–10 ஆம் ஆண்டு இது மேலும் அதிகரிக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு சீர்குலைத்துள்ள நிதி நிலவரத்தை சரிப்படுத்த பல ஆண்டுகள் ஆகும்.

செல்வி ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு 2001–ல் வெளியிட்ட வெள்ளை அறிக்கையைப் போன்று மத்திய அரசின் நிதி நிர்வாகம் குறித்த வெள்ளை அறிக்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிடும். நிதி நிர்வாகத்தில் ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்தும் அதே தருணத்தில் நிதி விவகாரங்களில் பழமை பற்றுடன் செயல்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் இல்லை என்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாக உணர்ந்திருக்கிறது. மத்திய அரசின் நிதி நிர்வாகத்தில் ஓர் ஒழுங்கு முறையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திரும்ப உருவாக்கும். அதே சமயத்தில் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியைக் கருத்தில் கொண்டு, நிதி பொறுப்பு மற்றும் பட்ஜெட் நிர்வாக (Fiscal Responsibility and Budget Management) – FRBM) இலக்குகள் மாற்றியமைக்கப்படும்.

மேற்காணும் குறிக்கோள்களை முதன்மையாகக் கொண்டு, பொருளாதாரத் துறையில் கீழ்க்காணும் திட்டங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிகிறது.

- மக்களிடம் அதிக பணப்புழக்கத்தை ஏற்படுத்த உறுதியளித்தல்
- மாத வருவாய் பெறும் அனைத்துப் பணியாளர்களுக்கும் வருமான வரியிலிருந்து விலக்கு அளித்தல்
- மற்ற பிரிவினருக்கு வருமான வரி விலக்கிற்கான உச்சவரம்பு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.
- வரம்பு பயன் வரி (Fringe Benefit Tax) மற்றும் வங்கி பண மாற்ற வரி (Banking Cash Transactions Tax)ஆகியவை நீக்கப்படும்.
- சில்லறை வியாபாரம், கட்டுமானம் மற்றும் உயர் கல்வித் துறைகளில் நேரடி வெளிநாட்டு முதலீடு இருக்காது. காப்பீட்டுத் துறையில் தற்போதுள்ள நேரடி வெளிநாட்டு முதலீட்டு முறை தொடரும்.
- விவசாய விளை நிலங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படமாட்டாது.
- சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக நிலங்களை அளிப்பவர்களுக்கு சந்தை விலை இழப்பீடு, வேலைவாய்ப்பில் முன்னுரிமை மற்றும் சிறப்புப் பொருளதார மண்டலத்தில் பங்கு ஆகியவை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## தேசிய பொருளாதாரம் தொடர்பான மற்ற பிரச்சினைகள்:

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள்:

- சரிந்து கொண்டிருக்கும் ரூபாயின் மதிப்பை நிலை நிறுத்துதல் – உலகின் முக்கிய நாணயங்களைப் போல் சுழன்று கொண்டிருக்கும் இந்திய ரூபாயை கட்டுப்படுத்த முழு முதலீட்டு கணக்கு மாற்றம் (Fuller Capital Account Convertibility) குறித்து தாராபூர் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளுதல். முதலீட்டு கணக்கு மாற்று (Capital Account Convertibility) யோசனையை கைவிடுதல்.
- தேவையான கொள்கையை புகுத்தி அந்நியச் செலாவணி வரவு மற்றும் இழப்பு ஆகியவற்றின் மூலம் உள்நாட்டுச் சந்தையில் ஏற்படும் திடீர் ஏற்றத்திற்குத் தீர்வு காணுதல். பிடிவாதமாக தாராளமயமாக்கல் கொள்கையைப் பின்பற்றாமல், ஒட்டுமொத்த பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்றபடி நேரடி வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கையை சீர்செய்தல்.

- இந்திய முதலீட்டாளர்களை எப்படி அறிந்து கொள்கின்றோமோ அதே முறையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் அறிந்து கொள்ளுதல்.
- அரசின் விரயச் செலவுகளை தடுக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல்.
- பெருநகரங்களுக்கான நிர்வாக வசதி கொண்ட நவீன துணை நகர, நகரியங்களை உருவாக்குதல் – நகரங்களில் ஏற்படும் இட நெருக்கடியை தவிர்க்கும் நோக்கில் மற்ற ஆசிய நகரங்களுக்கு இணையான வசதிகளை இந்தப் பெருநகரங்களில் ஏற்படுத்துதல்.
- பொதுத் துறை வங்கிகளின் முதலீட்டைப் போதுமான அளவுக்கு வலுப்படுத்துதல். நிதித் துறை தாராளமயமாக்கல் குறித்த ரகுராம் ராஜன் அறிக்கையை ஒரு குழுவுக்குப் பரிந்துரைத்தல். முக்கியமான பிரச்சினைகளையும், உலகில் ஏற்படும் நிதி மாற்றங்கள் குறித்தும் உரிய பரிசீலனைக்குப் பிறகு நடைமுறைப்படுத்துதல்.
- திட்டங்களைத் தீட்டுதல். சரக்கு முனையங்களை அறிமுகப்படுத்தப்படுவது உட்பட ரயில்வே துறையை நவீனமயமாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுத்தல், நீர்நிலைகளை மேம்படுத்துதல், பாசன வசதி, வடக்கு–தெற்கு, கிழக்கு–மேற்கு பகுதி சாலை வசதி, மின் வசதி மற்றும் துறைமுக வசதி ஆகியவை உள்ளிட்ட கட்டமைப்புத் திட்டங்கள் கொண்ட மிகப் பெரிய ஒருங்கிணைப்புத் திட்டத்தை தீட்டுதல்.
- தற்போதைய பெரிய மற்றும் சிறிய விமான நிலையங்கள் நவீனப்படுத்துப்படுவது விரைவுபடுத்தப்படும். சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக வடகிழக்குப் பகுதியில் ஒரு புதிய, நவீன விமான நிலையம் அமைக்கப்படும்.
- தங்க நாற்கர சாலை திட்டத்தை உறுதிபடுத்துதல் மற்றும் இந்திய ரயில்வே துறையை சர்வதேச அளவில் மேம்படுத்துவதற்காக வடக்குத் தெற்கு மற்றும் கிழக்கு–மேற்கு தாழ்வாரங்களைஅமைத்தல். சர்வதேசத் தர வேகத்தில், அனைத்து முக்கிய மாநகரங்களையும் இணைக்கும் புல்லட் ரயில் திட்டத்தை சர்வதேச அளவிலான பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் வசதிகளுடன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விரைவுபடுத்தும்.

- விவசாய மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (Small and Medium Enterprises) துறைக்கான போதுமான கடன் வசதியை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- உலக வர்த்தக அமைப்பின் செயல் திட்டத்திற்கு உட்பட்டு தற்போது தொடர்ந்து வரும் தோஹா சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஒருமித்த கருத்தை உருவாக்குதல். தன்னிச்சையான தாராளமயமாக்கல் குறித்த எந்தக் கொள்கையிலிருந்தும் நாம் பின்வாங்குவோம் என்பதை உறுதிப்படுத்துதல். தேவை ஏற்பட்டால் பலவீனமான ஒரு நிலையை விடுத்து, தெளிவாகவும் திட்டவட்டமாகவும் பேச்சுவார்த்தை நடத்துதல்.
- உலக வர்த்தக அமைப்பின் அதிகாரத்திற்கு உட்பட்டு காட்ஸ் அமைப்பின் (General Agreement on Trade in Services) பேச்சுவார்த்தை தொடங்கப்பட உள்ள நிலையில் வெளிநாட்டு சட்ட நிறுவனங்கள் மற்றும் கணக்கு நிறுவனங்கள் இந்தியாவில் செயல்பட அனுமதி மறுக்கப்படும். இந்திய வழக்கறிஞர் சங்கம் மற்றும் இந்திய தணிக்கையாளர் அமைப்புடன் ஆலோசனை நடத்தப்பட்ட பிறகே, இந்தத் துறைகளுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.
- உலகளாவிய நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காகவும், சர்வதேச பொருளாதார நிர்வாகத்திற்கு தகுதி வாய்ந்த தலைமையை ஏற்படுத்துவதற்காகவும் பல்வேறு அரசுகளுடனும், அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் மின் பற்றாக்குறைக்கு முற்றுப்புள்ளி வைத்தல். காற்று, சூரிய சக்தி மற்றும் பிற மரபு சாரா மின் திட்டங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தல்.
- மத்திய அரசின் நிலக்கரி, பெட்ரோல் மற்றும் எரிவாயு, தொலைத் தொடர்பு தொடர்பான கொள்கைகளை மறு ஆய்வு செய்தல். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் ஆட்சியில் வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டை மறு ஆய்வு செய்து, இந்திய அரசுக்குக் கிடைக்க வேண்டிய தொகையை முழுமையாக வசூல் செய்யும் வகையில் மீண்டும் இந்த ஒதுக்கீடு முறைப்படி வழங்கப்படும்.
- ஹைட்ரோ கார்பன், நிலக்கரி மற்றும் மரபு சார் மற்றும் மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை உள்ளடக்கிய புதிய எரிசக்தி கொள்கையை உருவாக்குதல்.

இதன் மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில் கூடுதலாக ஒரு லட்சம் மெகாவாட் மின் உற்பத்தியை உயர்த்துதல். மின்சக்தி பகிர்மானம் மற்றும் விநியோகத்தில் சர்வதேச தரத்துடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் அதிக இழப்பு ஏற்படுகிறது. நம் நாட்டில் உள்ள மின் நிலையங்களின் சுமை இயக்குவதற்கு உகந்ததாக இல்லை. மின் நிலையங்களில் உள்ள சுமையை மேம்படுத்தும் அதே சமயத்தில் பகிர்மானம் மற்றும் விநியோக இழப்புகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் குறைக்கும். இந்தியாவில் அபரிமிதமாகக் கிடைக்கும் இயற்கை ஆதார வளங்களைப் பயன்படுத்தி நாட்டிற்குத் தேவையான அளவுக்கு பாதுகாப்பான முறையில் அணுசக்தி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஆற்றல் படைத்துள்ள நமது விஞ்ஞானிகளின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உறுதியான நம்பிக்கை உண்டு.

- இந்திய–ஈரான் குழாய்வழி எண்ணெய் திட்டத்திற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் புத்துயிரளிக்கும். தேவைப்பட்டால், கடல்மார்க்கமாகக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.
- அரசு எதிர்கொண்டுள்ள அனைத்து பொருளாதார பிரச்சினைகள் குறித்து, ஆலோசனை வழங்கும் ஓர் அமைப்பாகத் திட்டக்குழு செயல்படும் வகையில், அதன் பங்களிப்பு குறித்து மறு ஆய்வு செய்யப்படும்.
- **கிரெடிட் கார்டு (Credit Card) பயன்படுத்துவோரிடம் அநியாய வட்டி வசூலிக்கும் வங்கிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.**
- ஓய்வூதிய நிதி நிர்வாகம் தனியார் வசம் ஒப்படைக்கப்படமாட்டாது. மேலும், ஓய்வூதிய நிதி பங்குச் சந்தையில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

## ஊழல்

இந்திய சமூகத்தையும் அதன் பொருளாதாரத்தையும் உருக்குலைத்து வரும் மற்றொரு பிரச்சினை, ஊழல். மிக மோசமான ஆட்சி நிர்வாகம், பதில் சொல்லும் பொறுப்பைத் தட்டிக் கழிப்பது, மோசமான சட்டங்கள் போன்றவற்றால் ஊழல் புரையோடியுள்ளது.

- தேவையற்ற சட்டங்களை மறு ஆய்வு செய்தல், ஆட்சி நிர்வாகத்தை சீரமைத்தல், அடிமட்ட அளவில் ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்துவது

உள்ளிட்ட நடவடிக்கைகளை நுணுக்கமான அளவிலும், பரந்த அளவிலும் மேற்கொண்டு இந்தப் பிரச்சினைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தீர்வு காணும்.

- **எந்தவித பயனுமின்றி வரி ஏய்ப்பு செய்வதற்காக வெளிநாடுகளில் ரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்தியாவுக்குச் சொந்தமானப் பணத்தை (7.5 லட்சம் கோடி ரூபாய்க்கும் 75 லட்சம் கோடி ரூபாய்க்கும் இடைப்பட்டதாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது) பறிமுதல் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**
- **இந்தியப் பொருளாதார மந்த நிலைக்கு முக்கிய காரணமான பங்கேற்பு பத்திரங்கள் வழங்கும் முறை ஆய்வு செய்யப்படும்.**
- கருப்புப் பணத்தை செலாவணியாக்கும் அனைத்து உடன்படிக்கைகளும் மறு ஆய்வு செய்யப்படும்.
- முழு முதலீட்டு கணக்கு மாற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.
- கள்ள நோட்டுகள் புழக்கத்தில் இருப்பதை சமாளிக்க போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படும்.
- உணர்ச்சிமிக்க அல்லது லாபத்தில் இயங்கக் கூடிய பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பங்குகள் விற்பனை செய்யப்படுவது நிறுத்தப்படும்.
- இந்திய பத்திர பாதுகாப்பு பரிமாற்ற வாரியம் (Security Exchange Board of India - SEBI), பாரத ரிசர்வ் வங்கி (Reserve Bank of India - RBI), ஓய்வூதிய நிதி முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் அதிகார அமைப்பு (Pension Fund Regulatory and Development Authority - PFRDA) ஈட்டுறுதி முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் அதிகார அமைப்பு (Insurance Regulatory and Development Authority – IRDA) மற்றும் இந்திய தொலைதொடர்பு முறைப்படுத்தும் அதிகார அமைப்பு (Telephone Regulatory Authority of India – TRAI) போன்ற சந்தை முறைப்படுத்தும் அமைப்புகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்படும்.
- ஆஸாதி பச்சாவோ ஆந்தோலன் வழக்கு விசாரணையில் உச்ச நீதிமன்றம் வெளியிட்ட கருத்துகளின் அடிப்படையில், இரட்டை வரிவிதிப்பைத்

தவிர்க்கும் உடன்பாடு (Double Taxes Avoidance Treaty) குறித்து, குறிப்பாக மொரீஷியஸ் நாட்டுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்பாடு குறித்து மறு ஆய்வு செய்யப்படும்.

- வரி ஏய்ப்பு செய்வோர், கள்ளச் சந்தைப் பேர்வழிகள், பதுக்கல்காரர்கள் மற்றும் யூக பேரத்தில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- ஏழைகளுக்கு சேவை செய்கிறோம் என்ற போர்வையில் துளிகூட அச்சம் இன்றி தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் தன்னார்வத் தொண்டு அமைப்புகள் மீது, குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து நிதியுதவி பெறும் இந்த அமைப்புகளின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
- திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மெத்தனமாகவும் அலட்சியப் போக்குடனும் செயல்படுவதாகத் தனது அறிக்கையில், இந்திய தலைமைத் தணிக்கைத் துறை தலைவர் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், பல்வேறு திட்டங்களுக்கான செலவின இலக்குகளை எட்டிவிட்டதாகச் சொல்லி 2007–2008 ஆம் ஆண்டில் பல்வேறு தன்னார்வ நிறுவனங்கள் தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்புகள் மற்றும் சங்கங்களுக்கு 51,259.85 கோடி ரூபாயை சர்வசாதாரணமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மாற்றி விட்டதையும் தன்னுடைய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பான கணக்குகளை சரிபார்க்கக் கூட முடியவில்லை என்பதையும் இந்திய தலைமைத் தணிக்கைத் துறை தலைவர் ஒப்புக்கொண்டுள்ளார். இது தொடர்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கும்.
- மிகக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் மோசடி தொடர்பான விசாரணை அலுவலகம் (The Serious Fraud Investigation Office) சட்டரீதியிலான எந்த அதிகாரமும், நவீன மோசடிகளை விசாரிப்பதற்கான உரிய கட்டமைப்பு வசதிகளும் இல்லாமல் உள்ளது. மேற்படி அமைப்புக்கு இவை இரண்டும் கிடைக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி அளிக்கிறது.

இதுவரை மத்தியில் ஆட்சி செய்த அரசுகளிலேயே, தற்போதைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தான் மிகவும் ஊழல் மலிந்த அரசு என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. ஐக்கிய முற்போக்கு அரசில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான மத்திய அமைச்சர்கள் ஊழல் குற்றசாட்டுகளுக்கு

ஆளாகி இருப்பது அனைவரும் அறிந்ததே. இந்த ஊழல் குற்றச்சாட்டுகளில் ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டு ஊழல் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசைக்கான அனுமதியை அந்தத் துறைக்கு தொடர்பே இல்லாத நிறுவனங்களுக்கு அளித்து தவறான வழிமுறையை பின்பற்றியதாக மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது நாட்டிற்கு ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலாக இழப்பு ஏற்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. சட்டவிரோதமாக மிகப் பெரிய தொகையை பெற்றுக்கொண்டுதான் இது போன்ற அனுமதியை அளித்திருக்க முடியும் என்பது தெளிவாகிறது. இது போன்ற இமாலய ஊழல் குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விசாரணை நடத்தி முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்.

## வேலை வாய்ப்பு

கடந்த பத்து ஆண்டுகளாக வேலை இல்லாதோரின் எண்ணிக்கை இந்தியாவில் பெருகி வருவதைக் காண்கிறோம். சில புள்ளி விவரங்களின் அடிப்படையில் கடந்த சில ஆண்டுகளில் ஐந்தரை கோடிக்கும் அதிகமான மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே தள்ளப்பட்டுள்ளனர் என்ற சுட்டெரிக்கும் உண்மை மிகவும் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது இனி பதவியேற்கும் அரசுகளுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும். தொழில்துறை மற்றும் விவசாயத் துறையை விரைந்து முன்னேற்றுவதன் மூலம் தனியார் துறையில் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியாக நம்புகிறது. இதனால், தற்போதைய பொருளாதார வீழ்ச்சி காரணமாக வேலை இழந்தோருக்கு மீண்டும் வேலைவாய்ப்புகளை வழங்க முடியும். சமூக நலத் துறை மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அதிகமாக செலவு செய்வதன் மூலம் அடுத்த சில ஆண்டுகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஒரு புதிய உத்வேகம் கிடைக்குமென அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்புகிறது. இரண்டாவதாக, வரிகளைக் குறைப்பதன் மூலம் செலவு செய்வது அதிகரித்தல், அதனால் நுகர்வு பெருகி, அதையடுத்து, தேவைகள் கூடி, இதன் எதிரொலியாக வேலை வாய்ப்புகள் அதிகரித்தல் என்ற சங்கிலித் தொடர் நடவடிக்கைகளுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வித்திடும்.

திட்டங்கள்

- மத்திய அரசுப் பணிகள் மற்றும் பாதுகாப்புத் துறையில் தற்போது காலியாக உள்ள 6 லட்சம் இடங்கள் நிரப்பப்படும்.
- மத்திய அரசுப் பணிகளில் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வரும் 5 லட்சம் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள்.
- தபால் துறையில் பணிபுரியும் 3 லட்சம் மிகைத் தொழிலாளர்கள் (Extra Departmental Workers) நிரந்தரம் செய்யப்படுவார்கள்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

## சமூக நலத் துறை

1980 முதல் தொடர்ந்தார்போல் 30 ஆண்டுகளாக ஆறு சதவிகிதத்திற்கும் அதிகமான வலுவான வளர்ச்சியை இந்தியா எட்டியுள்ளது. ஆனாலும் சர்வதேச நிலவரத்தோடு ஒப்பிடும் போது, மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டுப் பட்டியலில், இந்தியா தொடர்ந்து பின்தங்கி அடிமட்ட இடத்தைப் பிடித்துள்ளது. 180 நாடுகள் இடம் பெற்றுள்ள பட்டியலில் இந்தியா 132–ஆவது இடத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட, மிகச் சிறிதான நமது அண்டை நாடுகள்கூட நம்மைவிட உயர்ந்த நிலையில் உள்ளன. பாமர மக்கள் மீது அக்கறை கொண்டு செயல்படுவதாக, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தம்பட்டம் அடித்துக்கொள்ளும் கேலிக்கூத்தை, இந்த சிறு புள்ளி விவரம் மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது. உணவு, சுத்தமான குடிநீர், கல்வி அறிவு, சத்துணவு, சுகாதாரம், கல்வி, ஆரம்ப சுகாதாரம், குழந்தை பிறந்த ஒரு வருடத்திற்குள் இறப்பு, கருவுற்றிருக்கும் போது குழந்தை இறப்பு ஆகியவற்றில் இந்தியா மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதிக நிதி ஒதுக்கீடு, நிர்வாகத் திறமை, அதிகார மாற்றம் ஆகியவற்றின் மூலம் மேற்படி பிரச்சினைகள் உடனடியாக போக்கப்படும்.

இது குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுக்க உள்ளது:

- **தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் புனரமைக்கப்பட்டு தேசிய ஊரக மேம்பாட்டுத் திட்டம் என மாற்றப்படும். இத்திட்டத்தின் கீழ் 75 விழுக்காடு பொருளாகவும், 25 விழுக்காடு பணமாகவும் வழங்கப்படும்.**

**இதன் மூலம் தேவையில்லாத மதுபானச் செலவு தடுக்கப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த கிராம பஞ்சாயத்து அமைப்புகள் ஈடுபடுத்தப்படும்.**

- **தேசிய ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளோருக்கு ஆண்டிற்கு 150 நாட்கள் வேலை உறுதி செய்யப்படும்.**
- **ஏழை குடும்பங்களில் நிலவும் பசிப் பிணியைப் போக்கும் வகையில், தேசிய ஊரக மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்த இல்லங்களுக்கான அத்தியாவசிய பொருள்கள் திட்டம் வடிவமைக்கப்படும். இதன் மூலம், தேசிய ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாதத்திற்கு 5 நாட்கள் பணிபுரிவோருக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான 25 கிலோ அரிசி அல்லது கோதுமை, 1 கிலோ பருப்பு வகைகள், 1 கிலோ சமையல் எண்ணெய், 5 லிட்டர் மண்ணெண்ணெய் கொண்ட தொகுப்பு வழங்கப்படும்.**
- **100 நாட்கள் பணிபுரிந்தவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு வேட்டிகள், இரண்டு சேலைகள் வழங்கப்படும்.**
- கிராமப்புற இந்தியாவில் வரவு–வைப்பு (Credit-deposit) மேம்படுத்தப்படும்.
- உள்ளூர் கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றிற்காக 20,000 கோடி ரூபாய் மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு பஞ்சாயத்துகளுக்கு நேரடியாக மாற்றப்படும்.
- நதி முகத்துவாரம் உட்பட அனைத்து நதி நீர்நிலைகளும் ஆழப்படுத்தப்பட்டு சரிசெய்யப்படும்.
- உற்பத்தித் துறையில் இரட்டை இலக்க விழுக்காடு வளர்ச்சி காண்பதும், சேவைத் துறையில் 15 விழுக்காடு வளர்ச்சி காண்பதும் நோக்கமாகும்.
- **சிறிய மற்றும் சில்லரை வணிகர்களுக்காக, கிராமிய வங்கிகள் போல் தனி வங்கிகள் துவக்கப்படும்.**
- **சர்வதேச பொருளாதார நெருக்கடி காரணமாக வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட மறுவாழ்வு தொகுப்பு**
- உள்ளூர் வேலை வாய்ப்புகளை, குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை ஊக்குவிக்க பாதுகாப்பு நிதி பயன்படுத்தப்படும்.

- **எதிர்கால வணிக பயன் குறித்து வல்லுநர் குழு அமைக்கப்பட்டு தேவையான மற்றும் உடனடி திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.**
- **வழிபாட்டுத் தலங்களுக்கு வரும் பக்தர்களின் பசியை போக்கும் வகையில், தினந்தோறும் அவர்களுக்கு உணவு அளிக்கும் வகையில் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அன்னதானத் திட்டம் நாடு முழுவதும் உள்ள 10,000 அனைத்து மத வழிபாட்டுத் தலங்களில் மேற்கொள்ளப்படும். இந்த எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்படும்.**
- **இந்தத் திட்டத்திற்கு வரும் நன்கொடைகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தப்படும். இந்தத் திட்டத்திற்கான நன்கொடைகளுக்கு வருமான வரிச் சலுகை அளிக்கப்படும்.**
- வளர்ச்சியை விட மனிதவள குறியீட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- நிதிநிலை அறிக்கையுடன் வெளிப்படையான இலக்குகள் நிர்ணயிக்கப்படும்.
- ஊரக கட்டமைப்பு மற்றும் பாசனத்திற்கு மாபெரும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- **அடுத்த ஐந்து ஆண்டுகளில் மின் பற்றாக்குறை முழுவதுமாக நீக்கப்படும். மரபு சார் மற்றும் மரபு சாரா எரிசக்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.**
- **20,000 கிலோ மீட்டர் தொலைவுள்ள மாநில நெடுஞ்சாலைகள் மத்திய அரசால் எடுத்துக் கொள்ளப்படும்.**
- நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் நகரங்கள் நவீனமயமாக்கப்படுதல் மற்றும் உயர்த்தப்பட்ட விரைவுத் தடங்கள் கட்டுதல்.
- சுகாதாரம், கல்வி மற்றும் ஊரக கட்டமைப்பிற்கான செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 விழுக்காடு உயர்த்தப்படும்.
- சிறப்பான நிர்வாகத்தை கருத்தில் கொண்டு அனைத்து மத்திய வறுமை நீக்கும் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே திட்டமாக செயல்படுத்தப்படும்.
- கல்வி அறிவு மற்றும் கல்வியில் முன்னேற இலக்குகள் கூடிய அணுகுமுறை கடைபிடிக்கப்படும்.

- **அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் அளிக்கப்படும்.**
- நிரந்தர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் அமைக்கப்படும்.
- பாரம்பரிய ஏற்றுமதி பொருள்களுக்கு தொகுப்பு – இந்தியப் பொருட்களை ஊக்குவித்தல்.
- பனை பொருட்கள் ஏற்றுமதி ஊக்குவிக்கப்படும்.
- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு புத்துயிர் அளிக்கப்படும் ஆண்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.
- வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் முதலீடு ஊக்குவிக்கப்படும்.
- மின்னணு நிர்வாகம் அதிகரிக்கப்படும்.

## பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

இந்தியா இன்று எதிர்கொண்டுள்ள பேராபத்து, பயங்கரவாதம். அப்பாவிப் பொதுமக்களைக் குறிவைத்து ஈவு இரக்கமற்ற முறையில் நடத்தப்படும் பயங்கரவாத தொடர் தாக்குதல்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இது போன்ற தாக்குதல்களை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியம் காட்டுகிறது. கடுமையான எச்சரிக்கைகள் விடுப்பதையும், மேம்போக்கான உறுதிமொழிகள் தருவதையும் தவிர, மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குற்றச்சாட்டு சுமத்துவதிலும், பழி சுமத்துவதிலும தான் பெரும்பகுதி நேரம் விரயமாக்கப்பட்டது.

திகிலூட்டும் பயங்கரவாத நடவடிக்கைகள், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நீடித்து வரும் நிலையில், நாடு முழுவதும் உள்ள அரசியல் தலைவர்களின் அறிவுரையை அலட்சியப்படுத்தி விட்டு இந்திய அரசு பொடா சட்டத்தை ரத்து செய்தது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகள்கூட, பயங்கரவாதப் பிரச்சினைகளை சமாளிப்பதற்காக கடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களையும் சட்டவிரோதமாக பணம் பெறுவதைத் தடுக்கும் சட்டங்களையும் இயற்றியுள்ள போது, இந்திய அரசோ அமலில் இருந்த சட்டத்தைக்கூட ரத்து செய்தது. இந்திய அரசின் இது போன்ற நடவடிக்கை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இந்தியாவிற்கு எதிராக பயங்கரவாதத் தாக்குதல்களை திரும்பத் திரும்ப நடத்துவதற்கு வசதியாக இருந்தது.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது குறித்து தீர்வு காண முடியாமல் இந்திய அரசு பலவீனமடைந்து தடுமாறுவதில் எந்த வியப்பும் இல்லை என்பதோடு மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பு மக்களும் எந்த நேரத்திலும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஆட்படலாம் என்ற நிலையையும் உருவாக்கி இருக்கிறது.

இந்தியக் குடிமக்களைப் பாதுகாப்பதில் இந்திய அரசின் பங்கு முக்கியமானது என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. ஒவ்வொரு தீவிரவாத நடவடிக்கையும் நம் நாட்டின் மீது நடத்தப்படும் அறிவிக்கப்படாத யுத்தம் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உணருகிறது. அரசமைப்புச் சட்டத்தில் உள்ள கடமைகளையும், சமூக எதிர்பார்ப்புகளையும், தார்மீக தேவைகளையும் கருத்தில் கொண்டு கீழ்க்காணும் நடவடிக்கைகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எடுக்கும்.

- சட்டத்தை தவறுதலாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில், ஏராளமான பாதுகாப்புகள் அடங்கிய கடுமையான தீவிரவாத எதிர்ப்புச் சட்டம் இயற்றப்படும்.

- அண்டை நாடுகள் தொடர்பாக இந்தியா எதிர்கொண்டுள்ள மற்றொரு முக்கிய பிரச்சினை இந்திய–வங்கதேச எல்லைப் பகுதியில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படாமல் இருப்பது. இதன் விளைவாக, வங்கதேச நாட்டைச் சேர்ந்த குடிமக்கள் வடகிழக்குப் பகுதியில், குறிப்பாக மேற்கு வங்கத்திற்குள்ளும், அஸ்ஸாமிற்குள்ளும் ஊடுருவுகின்றனர். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட எல்லைப் பகுதி வேலி மற்றும் சாலைகள் அமைக்கும் பணிகளை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் இதுவரை நிறைவேற்ற முடியவில்லை. இந்தப் பணிகளை முடிப்பதற்காக அறிவிக்கப்பட்ட தேதி தொடர்ந்து மாற்றப்பட்டு வருகிறது. இதன் காரணமாக வங்க தேசத்திலிருந்து பெருமளவில் ஊடுருவுவோரை தடுக்க முடியாத நிலை ஏற்பட்டு, இந்த எல்லைப் பகுதிகளை ஒட்டியுள்ள இந்திய மாநிலங்களைச் சேர்ந்த பல மாவட்டங்களில் உள்ளூர் மக்களைவிட ஊடுருவியோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால், வேலை வாய்ப்புகளுக்கான போட்டியிலும், இப்பகுதியில் உள்ள ஆதார வளங்களை பயன்படுத்திக்கொள்வதிலும் பெரும் சிக்கல் ஏற்பட்டு பதற்றம் உருவாகியுள்ளது. வாக்காளர்கள் நிலவரத்திலும், மதம் சார்ந்த நடவடிக்கைகளிலும் இந்தப் பகுதிகளில் கணிசமான அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. **இந்திய வங்க தேச எல்லைப் பகுதியில் தடுப்பு வேலி அமைக்கும் பணிக்கு முன்னுரிமை கொடுத்து ஒரு வருடத்திற்குள் அதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பூர்த்தி செய்யும்.**

**இந்தியாவில் தங்கியிருப்பதற்கான காலக்கெடு முடிந்த பிறகும் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் வெளி நாட்டினர் குறித்து உரிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அவர்கள் கவுரவமாக வெளியேற்றப்படுவார்கள்.**

- பெண்கள் அதிரடிப்படை உள்ளிட்ட அதிரடிப்படை பிரிவுகள் ஒவ்வொரு மாநிலத்திலும் நிறுவப்படும்.
- நக்சலைட்டுகள் **ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு** சரணடைந்தால், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் சிறப்பு அரசியல் தொகுப்பு வழங்கப்படும்.
- உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 2.5 விழுக்காடு அளவுக்கு தற்போதுள்ள பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 3.5 விழுக்காடு அளவுக்கு உயர்த்தப்படும்.
- இந்தியாவின் பழமை வாய்ந்த இயந்திர சாதனங்கள் போர்க்கால அடிப்படையில் நவீனமயமாக்கப்படும் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி அளிக்கிறது.
- முப்படைகளில் பணியாற்றும் பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் உயர்த்தப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும். ஆறாவது ஊதியக் குழுவின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்ட ஊதிய விகிதங்களில் உள்ள குறைகள் களையப்படும்.
- தேவையான கலந்தாலோசனைக்குப் பிறகு, பாதுகாப்புப் பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளான சம்பளம், ஓய்வூதியப் பயன்கள் மற்றும் வேலைவாய்ப்பு சூழ்நிலைகள் குறித்து அனுகூலமான முறையில் பரிசீலிக்கப்படும். நமது நாட்டின் திறமையான இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கு உகந்த இடமாக முப்படை இருக்கும் வகையில் அவர்களுக்கான ஓய்வூதியப் பயன்கள் மற்றும் குடும்பப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும். எந்த நேரத்திலும் எதையும் சந்திக்கத் தயாராக இருக்கும் வகையில் முப்படைகள் ஊக்குவிக்கப்படும்.
- தாய்நாட்டிற்காக தங்களுடைய இன்னுயிரை தியாகம் செய்த பாதுகாப்புப் படை வீரர்களின் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு ஒரு புதிய சிறப்பு தொகுப்பு உருவாக்கப்படும்.
- தற்போதுள்ள அனைத்து காலியிடங்களும் நிரப்பப்படும். புதிய இடங்களும் உருவாக்கப்படும்.

- **மைக்ரோ சிப் பதிக்கப்பட்ட தேசிய குடிமக்கள் அடையாள அட்டைகளை (National Citizens Identity Cards) இந்திய மக்கள் அனைவருக்கும் வழங்கும் திட்டத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அறிமுகப்படுத்தும்.** அடையாள அட்டைதாரர் குறித்து தேவைப்படும் அனைத்து விவரங்களும் அதில் இடம் பெறும். காவல் துறை, வருமான வரித் துறை, கடவுச் சீட்டு மற்றும் குடி உரிமை அதிகார அமைப்புகள், தேர்தல் ஆணையம், போக்குவரத்துத் துறை, மாநில வருவாய்த் துறை, வங்கிகள் போன்ற பல்வேறு அரசு அமைப்புகளைச் சேர்ந்த உரிய அதிகாரிகள் இந்தத் தகவல்களை ஸ்கேன் வசதி மூலம் அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படும். அடையாள அட்டையில் பதிக்கப்பட்டுள்ள மைக்ரோ சிப்பில், அட்டைதாரரின் பெயர், பிறந்த தேதி, முகவரி, கடன் பெற்றுள்ள விவரங்கள், வாகன விவரங்கள், கிரிமினல் குற்றங்கள் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்படும். பாதுகாப்பு காரணங்களைக் கருத்தில் கொண்டு, தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அந்தந்த துறையைச் சேர்ந்த அதிகாரிகளால் மட்டுமே அவரவர்களுக்குத் தேவைப்படும் தகவல்களைத் தெரிந்து கொள்ளும் முறையில் சங்கேதக் குறியீடு எனப்படும் கோடிங் முறை அறிமுகப்படுத்தப்படும்.

- ஒவ்வொருவரையும் கணக்கெடுத்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணி மகத்தானது. **இதன் மூலமாக வேலை வாய்ப்புகள் உருவாவதோடு, சர்வதேச பொருளாதார மந்த நிலை காரணமாக நொடிந்து போயுள்ள தகவல் தொழில் நுட்பத் துறைக்குப் புத்துயிர் கிடைக்கும்.**

- நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் நீடித்து வரும் ராமர் கோயில் பிரச்சினைக்கு, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முனையும். இந்தப் பேச்சுவார்த்தை முயற்சி தோல்வியடைய நேரிட்டால், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை இறுதி முடிவாக ஏற்றுக்கொண்டு அதன்படி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

- **வட கிழக்கு மாநிலங்கள் மற்றும் சிறுபான்மையின மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்கும்.**

- **பொருளாதார பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தின் பொருளாதார வேரை அறுத்து, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பயங்கரவாதத்திற்கு நிதி செல்வதைத் தடுக்கும் வகையில் தேவையான பாதுகாப்பு வழிமுறைகள் வகுக்கப்படும்.**

## சர்வதேச உறவு

பயங்கரவாதத்தை முறியடிக்க கடுமையான அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்பதால், சர்வதேச உறவுகளில் குறிப்பாக அண்டை நாடுகளுடன் பகைமை உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று பொருளாகிவிடாது. சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை உருவாக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசைப் போல் வல்லரசு நாட்டின் கொள்கையை பின்பற்றி இந்தியாவின் பெருமையை சீர்குலைக்காது.

இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கும், ஒருமைப்பாட்டிற்கும் பங்கம் ஏற்படாத வகையில், அண்டை நாடுகளுடனான நீண்ட கால எல்லைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழு மூச்சுடன் பாடுபடும். எவ்விதத்திலும் இந்திய நலன்களை துளிகூட விட்டுக்கொடுக்காமல் பாதுகாக்கப்படும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

சீனா மற்றும் பாகிஸ்தானுடனான நிலுவையில் உள்ள எல்லைப் பிரச்சினைகளுக்கு இரு தரப்பு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முனைந்து செயல்படும். காஷ்மீர் முழுவதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகக் கருதப்படும்.

சர்வதேச நிதி நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் சார்க், ஏஷியான் மற்றும் சர்வதேச அளவில் பல நாடுகளுடன் பொறுப்பு மிக்க வகையில் இந்தியா இணைந்து செயல்படும். ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புக் குழுவில் இந்தியாவுக்கு நிரந்தரமான இடம் கிடைக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழு மூச்சுடன் செயல்படும். அதே நேரத்தில் சர்வதேச அமைப்புகளில் குறிப்பாக, ஐ.எம்.எஃப் (International Monetary Fund) மற்றும் உலக வங்கியில் பெயரளவுக்கு இடம் பெறுவதை விடுத்து, வலுவாகவும் ஆக்கபூர்வமாகவும் தனது பங்களிப்பை இந்தியா வழங்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முனைப்பான நடவடிக்கைகளில் ஈடுபடும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சர்வதேச செயல் திட்டம்:

- **இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் மேற்கொள்ள அழைப்பு விடுப்பதோடு மட்டுமல்லாமல், அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலையை நிறுத்தவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உடனடியாக கோரிக்கை விடுக்கும்.**

- பெரும்பான்மை சிங்களை இனத்தவருக்கு சமமாக தமிழ் மக்கள் நடத்தப்பட வேண்டும். இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில், அவர்களுக்கு நிர்வாக அதிகாரத்தை வழங்க வேண்டும்.

- **இந்த முயற்சி தோல்வி அடைந்தால், தமிழர்கள் கண்ணியத்துடன் வாழ ஏதுவாக தனி ஈழ மாநிலம் அமைக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.**

- **அதிகார மாற்றம் ஏற்பட்ட பிறகு தமிழ் பகுதிகளை புதுப்பிக்கவும், மேம்படுத்தவும், இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், 10,000 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும்.**

- வெளியுறவுக் கொள்கையில் தேசத்தின் ஒருமித்தக் கருத்தை கடைபிடிக்க வேண்டும் என்ற மரபை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு குலைத்துவிட்டது. இந்திய—அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்திற்கு நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் கடும் கண்டனம் எழுந்த போதும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வது தொடர்பாக தேசிய அளவில் ஒருமித்தக் கருத்து உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டால், அதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்தும். மாற்று நடவடிக்கையாக, இந்தியாவின் நீண்டகால மற்றும் குறுகிய கால நலன்களை விட்டுக் கொடுக்காமல், அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக மறு பேச்சுவார்த்தை நடத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடும்.

- குறைந்தபட்ச அணுசக்தி தவிர்ப்பை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழுமனதோடு ஏற்றுக் கொள்கிறது. தேவையேற்படின், விஞ்ஞான சமூகத்தின் ஆலோசனைப்படி, மேலும் அணுசக்தி சோதனையில் ஈடுபடுவது பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சிந்திக்கும்.

## கச்சத்தீவு

கருணாநிதியின் தாராள மனப்பான்மை காரணமாக 26.6.1974 அன்று செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, கச்சத்தீவு திருமதி இந்திரா காந்தி தலைமையிலான முந்தைய மத்திய காங்கிரஸ் அரசால் இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணான நடவடிக்கை மட்டுமல்லாமல் ராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்க்கை நடத்தி வரும் இந்திய மீனவர்களுக்கு எண்ணற்ற இன்னல்களை

உருவாக்கி வரும் ஒரு பிரச்சினையாகவும் இருந்து வருகிறது. கச்சத் தீவை பறிகொடுத்ததன் விளைவாக இந்திய கடற்பகுதி சுருங்கிவிட்டது. எந்த உள்நோக்கமும் இல்லாமல் தவறுதலாக சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச் செல்லும் நமது தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுகிறார்கள். துப்பாக்கிச் சூட்டில் பல மீனவர்கள் உயிரிழக்கின்றனர். கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான மீனவர்கள் இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டு வாடுகின்றனர். பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடி சாதனங்களை இந்திய மீனவர்கள் பறிகொடுத்துள்ளனர். நிராதரவாய்த் தவிக்கும் இந்த மீனவர்களின் பரிதாப நிலை குறித்து, மத்தியில் ஆட்சி நடத்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும், தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தை வைத்துள்ள மைனாரிட்டி திமுக அரசும் சிறிது கூட கவலைப்படாமல் அலட்சியமாகவும், அசட்டையாகவும் உள்ளன.

கச்சத் தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட நடவடிக்கை அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது. இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, இரு அவைகளின் ஒப்புதலோடு இந்திய அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என மேற்கு வங்க அரசு தொடுத்த பெருபாரி (Berubari) வழக்கில் உச்ச நீதிமன்றம் **1960–**ஆம் ஆண்டில் தீர்ப்பளித்தது. கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்ட விவகாரத்தில் இது பின்பற்றப்படவில்லை.

மேலும் இலங்கை அரசுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், கச்சத் தீவுக்கு மேற்கே ஒரு கடல் மைல் தொலைவில் எல்லைக்கோட்டை அமைக்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. மாநில எல்லையில் எந்த மாற்றத்தைச் செய்வதாக இருந்தாலும் முதலில் அது குறித்து சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அதன் கருத்தை தெரிந்துகொள்ள வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பிரிவில் கூறப்பட்டுள்ளது.

அந்தச் சமயத்தில் கருணாநிதி தலைமையிலான திமுக அரசு, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக இலங்கைக்கு கச்சத் தீவை தாரைவார்த்துக் கொடுத்ததைத் தடுக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதே சமயத்தில் பெருபாரி விவகாரத்தில் நேரு தலைமையிலான மத்திய அரசின் முடிவை எதிர்த்து, மேற்கு வங்காளத்தில் அன்று ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு உச்ச நீதிமன்றம் சென்றது.

**கச்சத் தீவு சம்பந்தமாக இந்திய–இலங்கை உடன்பாட்டை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். தென்னிந்தியாவில் உள்ள மீனவ சமுதாயத்தின் பிரச்சினைகளைப் போக்க ஏதுவாக இலங்கையிடமிருந்து கச்சத் தீவை மீட்கத் தேவையான அனைத்தையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செய்யும்.**

## வேளாண்மை

விவசாயத் துறையைப் பொருத்தவரையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயல்பாடு நாட்டிற்கு மிகப் பெரிய கரும் புள்ளியாக அமைந்துவிட்டது. நாடு முழுவதும் ஏராளமான விவசாயிகள் தற்கொலை செய்துகொண்ட துயரத்திற்கு இந்த அரசு தான் நிச்சயம் காரணம். பொருளாதார இழப்பு தான் விவசாயிகள் தற்கொலைக்கு அடிப்படை காரணம். 100 கோடி மக்களைக் கொண்டுள்ள நம் நாடு விவசாயத்தில் தன்னிறைவு அடைய வேண்டும். ஏனென்றால், விவசாய உற்பத்தியில் சிறிதளவு குறைந்தாலும், நமக்குத் தேவையானவற்றை கொடுக்கக் கூடிய அளவில் எந்த நாட்டிலும் அதிகமாக இல்லை.

விவசாயத்திற்கு வழங்கப்பட்டு வந்த மானியங்கள், உலக வர்த்தக அமைப்பு உடன்பாட்டில் திணிக்கப்பட்ட நிபந்தனைகளால் தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்டன. இப்படிப்பட்ட புறக்கணிப்பால், விவசாயம் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காத, வருமானம் கிடைக்க சாத்தியமற்ற தொழிலாக மாறிவிட்டது. மேலும், இந்த நெருக்கடியான சூழ்நிலை இன்றைய நவநாகரிகத் தலைமுறையினரை, உயிர்நாடியான விவசாயத் தொழிலில் இருந்து விலகிச் செல்ல வைத்துவிட்டது. இன்னொரு பக்கம், அதிக லாபத்திற்கு ஆசைப்படுவோர், இந்திய சூழ்நிலைக்கு முற்றிலும் பொருத்தமற்ற மரபணு மாற்று விதைகளைப் பயன்படுத்துவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

உணவு உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் ஊரகக் கட்டுப்பாட்டை மேம்படுத்துதல் மூலம் இந்தியாவின் வேலை வாய்ப்பு மற்றும் விவசாயப் பிரச்சினைகளை தீர்த்துவிடலாம் என்பதிலும், மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டை மேம்படுத்தும் அதே சமயத்தில் பொருளாதார மந்த நிலை காரணமாக ஏற்பட்டுள்ள சவால்களை தீர்த்துவிடலாம் என்பதிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்தியாவில் விவசாய மறுமலர்ச்சியை உறுதி செய்ய, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கீழ்க்காணும் திட்டங்களை தன்வசம் வைத்துள்ளது.

- **தேசியமயமாக்கப்படாத வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகளில் இருந்து பெறப்பட்ட விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.**
- உணவு தானியங்கள் பயிரிடுவதற்கு பெறப்பட்ட கடனுக்கான வட்டிக்கு நிதி உதவி செய்யப்படும். (குறைந்த வட்டிக்கு கடன் வழங்குதல்) – குறைந்த விளைச்சல் உள்ள தானியங்களுக்கு முழு வட்டி விலக்கு அளிக்கப்படும்.
- 30 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.
- மழை நீர் சேமிப்புத் திட்டத்தின் மூலமும், மழைத் தண்ணீரை சரியான முறையில் கால்வாய்கள் மூலம் சேமித்து வைத்தும் நம் நாட்டின் நிலத்தடி நீரின் அளவு உயர்த்தப்படும்.
- **விதைகள் மற்றும் உரங்களை மானிய விலையில் வழங்குதல்.**
- **மரபணு மாற்று விதைகள் ஊக்கப்படுத்தப்படுவது நிறுத்தப்படும்.**
- உயிரி உரங்களை விருத்திபடுத்துதல்.
- **பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மோட்டார் மற்றும் பம்பு செட்டுகளை இயக்க இலவச மின்சாரம் வழங்கும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.**
- **ஊழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும் வகையில் கொள்முதல் விலையை நிர்ணயிக்க விவசாயிகள் ஆணையம் அமைத்தல்.**
- 2014 ஆம் ஆண்டிற்குள் உணவு தானிய உற்பத்தி இலக்கை 300–350 மில்லியன் டன்னாக உயர்த்துதல். (தற்போது 200 மில்லியன் டன்னாக உள்ளது)
- சராசரி தனி நபர் உணவு தானிய நுகர்வு நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 600 கிராமாக உயர்த்துதல். (தற்போது 400 கிராமாக உள்ளது) இதன் மூலம் இந்திய மக்களின் சமூகப் பொருளாதாரக் குறியீடு மேம்படுத்தப்படும்.
- **ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஆடு, மாடுகளின் தீவன வங்கி ஏற்படுத்தப்படும்.**
- **ஒவ்வொரு தாலுகாவிலும் உணவு பதப்படுத்தும் பிரிவு ஏற்படுத்தப்படும்.**
- **அழுகிப்போகும் அல்லது விரைவில் கெட்டுப்போகும் பொருட்களை பாதுகாப்பதற்காக ஒவ்வொரு தாலுகாவிலும் குளிரூட்டப்பட்டக் கிடங்குகளை அமைத்தல்.**

- **கங்கை மற்றும் காவிரி டெல்டா பகுதியை நாட்டின் புதிய உணவுக் களஞ்சியங்களாக மேம்படுத்துதல்.**
- **மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளை ஒன்றிணைக்க காலமுறை நடவடிக்கை எடுத்தல்.**
- **மாநிலங்களுக்குள் பாயும் நதிகளை ஒன்றிணைத்தல்.**
- **இரு மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவாக்களை பரஸ்பர பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்து வைத்தல் மற்றும் காவேரி மற்றும் முல்லைப் பெரியாறு பிரச்சினைகளைப் போல், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை செயல்படுத்த உறுதி அளித்தல்.**
- அனைத்து நீர்நிலைகள், ஆறுகள், முகத்துவாரங்கள், நதிகள் ஆகியவற்றை தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல்.
- **குடிப்பதற்கு ஏதுவாக, அனைத்து நீர்நிலைகளையும் சுத்தம் செய்தல் மற்றும் மருந்து தெளித்தல்.**
- தமிழ் நாட்டில் உள்ள மழைநீர் சேமிப்புத் திட்டத்தை தேசிய அளவில் செயல்படுத்துதல்.
- மாவட்ட அளவில் பருவ நிலைகளை கண்டறிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்.
- **தமிழ் நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட விவசாயிகள் காப்பீடு மற்றும் பாதுகாப்பு தொகுப்பை (உழவர் பாதுகாப்புத் திட்டம்) தேசிய அளவில் அறிமுகப்படுத்துதல்.**
- சர்வதேச மற்றும் உள்நாட்டு விற்பனைக்காக இயற்கை விவசாய முறையில் உற்பத்தி செய்யும் விளை பொருள்களுக்கு உரிய முத்திரை (Brand) அந்தஸ்தை உருவாக்குதல்.
- **மாவட்ட அளவில் 250 கிளைகளை கொண்ட, விவசாயிகளுக்கு நேரடியாக கடன் வழங்கும் வங்கியாக நபார்டு வங்கி மாற்றியமைக்கப்படும்.**
- வேளாண் துறைக்கும் மற்றும் வேளாண் பல்கலைக்கழகத்திற்கும் தொடர்பு ஏற்படுத்த உறுதி அளிக்கப்படும்.

## மீனவம்

சுமார் 7600 கிலோ மீட்டர் அளவுள்ள மிக நீண்ட கடற்கரையை இந்தியா கொண்டுள்ளது. தங்கள் வாழ்வாதாரத்திற்காக பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த ஏராளமானோர், கடற்கரை மாநிலங்களில் பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கட்டுமரங்கள் மற்றும் பழங்காலத்து வலைகளைப் பயன்படுத்தி மிகவும் சிறிய பகுதிக்குள்ளேயே மீன்பிடித்து மிகக் குறைந்த வருமானமுள்ள வளமற்ற மீனவர்களாகவே காலம் தள்ளி வருகின்றனர். இந்தப் பகுதிகளையும் தாண்டி, அபரிமிதமான மீன்வளம் நிறைந்துள்ள, பெருமளவிலான கடற்பகுதி இதுவரை பயன்படுத்தப்படாமலேயே உள்ளது. ஆழ்கடலுக்குச் சென்று மிக அதிக அளவில் மீன்பிடிக்கும் வகையில் பாரம்பரியமான இந்திய மீனவர்களுக்குப் பயிற்சி அளித்து, நவீன மீன்பிடி சாதனங்களை வழங்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திட்டமிட்டுள்ளது. மிகப் பெரிய ஏற்றுமதி சந்தையைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் உரிய சேமிப்பு கிடங்கு வசதி மற்றும் நவீன முறையில் பாதுகாப்பான பேக்கிங் வசதிக்கும் ஏற்பாடு செய்யப்படும். மீன்பிடித் தொழிலுக்கு இப்படிப்பட்ட புதிய பரிமாணத்தை அளிப்பதன் மூலம் ஒட்டுமொத்தமான இந்திய மீனவர்கள் வாழக்கையில் ஒரு புதிய விடியல் பிறக்கும்.

- பாரம்பரிய மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்க பயிற்சி அளிக்கப்படுவார்கள்.
- மீன் ஏற்றுமதிக்கு உத்வேகம் கொடுக்கும் வகையில் தூய்மைப்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் கட்டுதல் மையங்கள் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் அமைக்கப்படும்.
- சுனாமி ஆழிப்பேரலையின் விளைவாக வங்கிகளில் பெற்ற கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படும்.
- படகுகள், வலைகள் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளுக்காக தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (National Co-operative Development Corporation) மூலம் கடன் வழங்கப்படும்.
- படகுகளுக்கு உள்ளே மற்றும் வெளியே உள்ள மோட்டார்களுக்கான மண்ணெண்ணெய் மற்றும் டீசலுக்கான மானியம் அதிகரிக்கப்படும்.

- மீனவர்கள் பயன்படுத்தும் மோட்டார் படகுகளுக்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.
- மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழ் நாட்டில் விவசாயிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பது போல், மீனவர்களின் வாழ்க்கையை பாதுகாக்கும் பொருட்டு காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

## விளையாட்டுத் துறை

சிறிய மற்றும் மிகச் சிறிய நாடுகள் எல்லாம் உலக விளையாட்டு அரங்கில் கொடி கட்டிப் பறக்கும் போது, இந்தியாவின் முதல் ஒலிம்பிக் சாம்பியனைக் காண நீண்ட நெடுங்காலமாகக் காத்திருக்க நேர்ந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும், அனைத்து வசதிகளும் கொண்ட தேசிய விளையாட்டுப் பயிற்சி மையங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்படுத்தும். இந்த ஒவ்வொரு மையமும் அந்தப் பகுதியின் தனித்தன்மை வாய்ந்த விளையாட்டுப் போட்டியில் முக்கிய கவனம் செலுத்தும். உதாரணமாக, தமிழகத்தில் கடற்கரை மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும் இந்த தேசிய விளையாட்டுப் பயிற்சி மையத்தில் நீச்சல் போட்டிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதற்காக மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த திறமை வாய்ந்த நீச்சல் வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தீவிர பயிற்சி அளிப்பதுடன் போதுமான ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்கி, இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி, ஒட்டுமொத்தத் திறன்களையும் மேம்படுத்துவதற்கான சிறப்புப் பயிற்சி வழங்கப்படும். அத்துடன், அவர்கள் முறையாகப் பள்ளியில் கல்வி பயில்வதும் உறுதி செய்யப்படும். ‘**தங்கம் வெல்லும் திட்டத்தின்**’ கீழ் முழுமையான சர்வதேச தரம் வாய்ந்த பயிற்சியை முற்றிலும் இலவசமாக அளித்து, சர்வதேச போட்டிகளில் இடம்பெறும் அனைத்து விளையாட்டுகளிலும் வெற்றி வீரர்களை உருவாக்குவதில் இந்தப் பயிற்சி மையங்கள் தீவிர கவனம் செலுத்தும்.

## கல்வி

கல்வித் துறைக்கான எந்த ஒரு செலவும் நாளைய தேசத்தின் முதலீடு என்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியாக நம்புகிறது. இன்றைய குழந்தைகள் தான் நாளைய குடிமக்கள் மற்றும் தலைவர்கள்.

நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்காக வலிமை படைத்த, நேர்மையான, கல்வி அறிவு பெற்ற, திறன் வாய்ந்த குடிமக்களை உருவாக்குவதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கை கொண்டுள்ளது. பள்ளிக்கூடம் செல்வதில் ஆர்வம் கொண்ட குழந்தைகள், பட்டினி இல்லாமல் மகிழ்ச்சியுடன் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனரும், அப்போதைய முதலமைச்சருமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தில் சத்துணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து ஒரு சகாப்தம் படைத்தார். வளமான இந்தியாவை உருவாக்க, கல்வித் துறையில் கீழ்க்காணும் நடவடிக்கைகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எடுக்கும்.

- **இந்தியாவின் எதிர்கால சந்ததியினரை எழுத்தர்களாக அல்ல, உலகத் தலைவர்களாக உருவாக்க கல்விமுறை, பாடத் திட்டம், போதனை முறை உள்ளிட்ட அனைத்தையும் முழுமையாக சீரமைப்பதற்கான தேசிய கல்வி ஆணையம் ஒன்று அமைக்கப்படும்.**

- அனைத்து மாநிலங்களிலும் அரசுப் பள்ளிகளில் நடைமுறையில் உள்ள சத்துணவுத் திட்டத்திற்கு கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு அத்திட்டம் வலுப்படுத்தப்படும்.

- **தொழிற்கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்த அனைத்து மாணவ மாணவிகளுக்கும் மடி கணினி (Laptop Computer) வழங்கப்படும். இந்தத் திட்டம் படிப்படியாகப் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் உள்ளிட்ட மாணவ, மாணவிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.**

- **மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தை சேர்ந்த மாணவ, மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கப்படும்.**

- **நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் தலா ஒரு இந்திய தொழில்நுட்ப நிலையம் (Indian Institute of Technology) மற்றும் இந்திய மேலாண்மை நிலையம் (Indian Institute of Management) அமைக்கப்படும்.**

- **உலகப் புகழ்பெற்றுள்ள ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ், ஹார்வேர்டு மற்றும் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகங்களுக்கு இணையாக சட்டம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தரம் வாய்ந்த கல்வி மையங்கள் ஏற்படுத்தப்படும்.**

- வேதகால அறிவியல் தேசிய மையம் (National Centre of Vedic Sciences) அமைக்கப்படும்.
- புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் தேசிய மையம் (National Centre for Inventions Promotion) அமைக்கப்படும்.
- **அலையன்ஸ் ஃப்ராங்கைஸ், (பிரெஞ்சு) மாக்ஸ் முல்லர் பவன் (ஜெர்மன்) ஆகிய மையங்களில் அளிக்கப்படுவதைப் போல தமிழ் மொழியில் குறுகிய கால பயிற்சி மற்றும் பட்டப் படிப்புக் கல்வி வழங்குவதற்கான உலகத் தமிழ் மையம் தமிழ் நாட்டில் அமைக்கப்படும். அனைத்து நவீன வசதிகளையும் கொண்ட இந்த மையத்தின் விடுதியில் உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் தங்கியிருந்து தொன்மையானத் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் தமிழ் மொழியின் மேன்மையும் சிறப்பும் உலகம் முழுவதும் பரப்பப்படும்.**
- **மலேசியா, மாலத் தீவுகள், இலங்கை, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் தமிழ் மக்கள் அடக்கியாளப்படுவது, ஒடுக்கப்படுவது போன்றவைத் தொடர்பான பிரச்சினைகளை அந்தந்த நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு வந்து, உரிய தீர்வு காண்பதிலும் இந்த மையம் கவனம் செலுத்தும்.**
- தமிழர்கள் அதிக அளவில் வசிக்கும் நாடுகளுடன் கலாசாரப் பரிவர்த்தனை நிகழ்ச்சிகளுக்கும் இந்த மையம் ஏற்பாடு செய்யும். இந்த நடவடிக்கையின் பலனாக, தமிழ் நாட்டின் கலாச்சார மற்றும் பாரம்பரிய பெருமைகளை உலகத் தமிழர்கள் உணர்ந்துகொள்ள வழி பிறக்கும்.
- தமிழ் நாட்டில் அமைக்கப்படும் உலகத் தமிழ் மையத்தின் வெற்றியைப் பொருத்து இதே போன்ற மையங்கள், தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் குஜராத், கேரளா, பஞ்சாப் மற்றும் பிற மாநிலங்களிலும் அமைக்கப்படும்.

## ஆட்சிமொழிக் கொள்கை

பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி ஜெயலலிதா ஆகியோருக்கு இந்தி மொழி மீதோ, இந்த நாட்டின் இந்தி மொழி பேசும் மக்களின் முன்னேற்றம் மற்றும் அவர்களின் ஜனநாயக உரிமைகள் குறித்தோ, எந்த வெறுப்புணர்ச்சியும் இல்லை. கடந்த காலத்தில், இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த சில தலைவர்கள் இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக இந்தியைத் திணிப்பதற்காக தீவிரமாக செயல்பட்டது தான் தமிழகத்தின் இந்தத் தலைவர்களை மிகுந்த

கவலைக்கு உள்ளாக்கியது. நீண்ட வரலாறும், தொன்மையான மொழிகளும், கலாசாரமும் கொண்ட இந்தியாவில் பல்வேறு இனத்தினரும், பல்வேறு மொழி பேசுபவரும் வாழ்ந்து வருகின்றனர்.

இப்படிப்பப்பட்ட சூழ்நிலையில் இந்தி பேசாத மக்கள் மீது, இந்தியைத் திணிக்கும் எந்த முயற்சியும் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் என்பதை உணர்ந்த அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு, 1959 ஆகஸ்டு 7–ஆம் நாள் நாடாளுமன்ற மக்கள் அவையில் நடைபெற்ற மொழிப் பிரச்சினைத் தொடர்பான விவாதத்தின் போது, குறுக்கிட்டுப் பேசிய தருணத்தில் பின்வரும் உறுதிமொழியை அளித்தார்:

*“எந்தவிதத்திலும் (இந்தி) திணிக்கப்பட மாட்டாது. இரண்டாவதாக, எந்த காலவரம்பும் இன்றி – எவ்வளவு காலத்திற்கு என்பது எனக்குத் தெரியவில்லை – கூடுதல் இணைப்பு மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப்படும். அந்த மொழியில் ஏதோ ஒரு வசதி இருப்பதாலோ, மற்றும் வேறு விஷயங்களைக் கருத்திற்கொண்டோ இப்படி அறிவிக்கவில்லை. ஆனால், இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள், முன்னேற்றத்திற்கான சில கதவுகள் தங்களுக்கு மூடப்பட்டுள்ளதாகக் கருதிவிடக்கூடாது என நான் விரும்புகிறேன். எனவே, மக்கள் விரும்பும் வரை இந்த மொழி (ஆங்கிலம்) ஒரு மாற்று மொழியாக நீடிக்கும். எவ்வளவு காலம் இப்படி நீடிக்கும் என்பதை முடிவு செய்யும் பொறுப்பை இந்தி தெரிந்த மக்களிடம் நான் ஒப்படைக்கப்போவதில்லை. இது குறித்து முடிவெடுப்பதை இந்தி தெரியாத மக்களிடமே விட்டுவிடுகிறேன்.”*

தமிழ் உட்பட எட்டாவது பட்டியலில் இடம் பெற்றுள்ள நாட்டின் அனைத்து மொழிகளையும் ஆட்சிமொழிகளாக அறிவிக்கவும், அத்துடன் நேரு அளித்துள்ள உறுதிப்படி, இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை மாற்று மொழியாக ஆங்கிலம் நீடிக்கவும் வழி வகை செய்யத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டுவரும்படி மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்கவுள்ள அரசிடம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

## ஆரோக்கியம்

**"அனைவருக்கும் ஆரோக்கியம்"** என்ற சாதனையை அடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது. இந்த சாதனையை படைப்பதற்காக வருங்காலத்திற்கு முக்கியமான அறிவியல் துறையில் ஈடுபட முடிவெடுத்துள்ளது.

- குறைந்த செலவில் தரமான மருத்துவம் பெரும்பாலான மக்களுக்கு கிடைக்கும் வகையில், தரமான மருத்துவர்களையும், துணை மருத்துவர்களையும் உருவாக்க ஒவ்வொரு மாநிலத்திலும் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிலையம் (All India Institute of Medical Science) மாதிரியான மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகள் நிறுவப்படும்.
- ஒவ்வொரு மாநிலத்திலும் மாற்று மருந்து மையங்கள் ஏற்படுத்தப்படும்.
- **தண்டு செல் வங்கிகள் (Stem Cell Banks) மற்றும் டயாலிசிஸ் (Dialysis) மையம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும்.**
- அவசர காலத்திற்கு சிகிச்சை வாகன சேவைகள் (Ambulance and air ambulance Services) ஏற்படுத்துதல்.

## சிறுபான்மையினர்

உலக அரசியல் அமைப்பில் இந்தியாவின் தனித் தன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது அதன் மதச்சார்பற்ற கொள்கை. இது காலத்தினால் சிதைக்கப்படவில்லை. இன்று பல சக்திகள் இந்த மதச்சார்பற்ற கொள்கையை சீரழிக்கவும், சர்வதேச அளவில் இந்தியாவின் செல்வாக்கை குறைக்கவும் தீவிரம் காட்டி வருகின்றன. இந்த நிலையைத் தடுக்க, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பின்வருவனவற்றை முன்மொழிகிறது:

- நீண்ட கால பிரச்சினையான தலித் கிறிஸ்தவர்கள் இட ஒதுக்கீட்டிற்குத் தீர்வு காண முன்னுரிமை அளிக்கப்படும்.
- ஜெருசலம் புனிதயாத்திரை மேற்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கு மானியம் வழங்கப்படும்.

- இயற்கை எய்தியவர்களுக்கு கிறிஸ்தவர்கள் அஞ்சலி செலுத்தும் கல்லறைத் திருநாள் வரையறுக்கப்பட்ட விடுமுறை நாளாக அறிவிக்கப்படும்.
- இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் யாத்திரிகர்கள் தங்குவதற்காக இந்தியாவில் கிறிஸ்தவ, புத்த மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தினரின் முக்கிய வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ள நகரங்களில் குறைந்த கட்டணங்களில் அனைத்து வசதிகள் மற்றும் வெகு சிறப்பான சேவைகளுடன் கூடிய விடுதிகள் அமைக்கப்படும்.
- சீரான, பதட்டமற்ற, உண்மையான மதச்சார்பற்ற சமூகத்தை ஒன்று சேர்க்கும் வகையில் பாதுகாப்பு குறித்த சிறுபான்மை சமுதாயத்தினரின் அனைத்து அச்ச உணர்வுகளும் பேச்சுவார்த்தை மூலம் களையப்படும்.

## தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் மற்றும் சீர்மரபினர்

சமூக மற்றும் பொருளாதார ரீதியில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ள இந்த மக்களின் முன்னேற்றத்திற்காக கவர்ச்சிகரமான சிறப்பு உதவித் திட்டம் அறிவிக்கப்படும். இந்தச் சமுதாய மக்கள் குடியேறும் வகையில் பிரத்யேகமான வீட்டு வசதிகளை உருவாக்குவதற்காக அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். பெண்களுக்கென்று தனியான குளியலறைகள், கழிவறைகள், அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் கழிவு நீர் வசதி உள்ளிட்ட அனைத்துத் தேவைகளும் நிறைவேற்றப்படும். வேலை வாய்ப்புகளுக்கான உரிய வழிகாட்டுதலுடன் இந்த மக்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் ஆளுமைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். தொழில் முனைவோருக்குக் கடன்களும் மானிய உதவியும் வழங்கப்படும்.

- தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதிகளில் இந்த சமுதாயத்தினருக்கென்றே வேலை வாய்ப்புகளை வழங்க, தொழிற்கூடங்களைத் தொடங்கும் தொழில் முனைவோருக்கும் தொழிலதிபர்களுக்கும் கூடுதல் மானிய உதவியும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்குமான நிதி உதவியும் வழங்கப்படும். அனைவரையும் சம உரிமை பெற்றவர்களாகவும், தங்களுடைய சொந்தக் காலில் நிற்பவர்களாகவும் உயர்த்த வேண்டும் என்பது தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதன் தொலைநோக்குத் திறன் படைத்த தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலையாய குறிக்கோள் ஆகும்.

- இந்தியாவின் பல பகுதிகளில் தீண்டாமை கொடுமை இன்றும் நீடிப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உணர்ந்துள்ளது. இந்தியாவின் நவீன முகத்தில் விழுந்துள்ள ஒரு கரும்புள்ளி இது. இந்த சமூகக் கேட்டைக் களைவதற்காக இன்றுவரை இயற்றப்பட்ட சட்டங்களால் உரிய பலன் கிடைக்கவில்லை. சமுதாயத் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள், தன்னார்வத் தொண்டு அமைப்பினர் ஆகியோரை ஈடுபடுத்தி இந்த சமூகக் கொடுமையை வேரறுக்க புதிய அணுகுமுறையுடன் கூடிய வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி பூண்டுள்ளது.

- மனிதக் கழிவுகளை ஆண்களும் பெண்களும் சுமந்து செல்லும் இழிநிலை இன்றும் கூட நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகிறது. வேதனையான இந்த நிலவரம், தீண்டாமைக் கொடுமைக்கு வழி வகுக்கிறது. வேறு எந்த வேலை வாய்ப்பும் கிடைக்காத நிலையில் தீண்டத்தகாதவர்களாக கருதப்படுவோர் இந்த வேலையில் ஈடுபடும் நிர்பந்ததத்திற்கு ஆளாகிறார்கள். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசும் பல சட்டங்களை இயற்றியும், சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டுள்ள இந்த மக்களுக்குத் தேவையான திறன்களையும், பயிற்சிகளையும் அளித்து, அவர்களின் மறுவாழ்வுக்கு வழி காணப்படாத வரையில் மனிதக் கழிவுகளை மனிதர்களே சுமந்து செல்லும் அவலமும், தீண்டாமைக் கொடுமையும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து தான் இருக்கும். இந்தக் குறிப்பிட்டப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காண அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

- அருந்ததியர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்த கோரிக்கை முன்னுரிமை அடிப்படையில் தீர்க்கப்படும்.

- சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் சுய வேலைவாய்ப்புகளுக்காக வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும்.

- தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கான கல்விக் கட்டணத்தை ரத்து செய்யவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திட்டமிட்டுள்ளது.

## பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர்

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலன்களைப் பாதுகாக்க அரசியல் அமைப்புச் சட்டப்படி அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளும். சட்டத்தின் அடிப்படையில் நிரந்தரமாக உருவாக்கப்படும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் ஆணையம் இந்த சமுதாயத்தினரின் அனைத்துப் பிரச்சினைகளையும் கவனித்துக் கொள்ளும். கல்வி உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் இந்த சமுதாயத்தினருக்கான ஒதுக்கப்பட்ட காலி இடங்களில் இவர்கள் மட்டுமே பணியமர்த்தப்படுவது உறுதி செய்யப்படும். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரின் பாரம்பரியத் திறன்களை முறையாக அங்கீகரித்து, மேம்படுத்தி, இன்றைய நவீன வாழ்க்கைக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்வதற்காக இந்த ஆணையம், மற்ற அமைப்புகளுடன் இணைந்து முனைப்புடன் செயல்படும்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், தொழில்நுட்ப மற்றும் தொழில் முனைவுத் திறன்களில் தலைசிறந்தவர்களாக இருப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உணர்ந்துள்ளது. சொந்தமாகத் தொழில் தொடங்குவதில் இந்த சமுதாயத்தினர், அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். ஆனாலும் இவர்களில் பெரும்பாலான தொழில் முனைவோர், ஒரு குறிப்பிட்ட நிலையைத் தாண்டி முன்னேறுவதிலும், பொருளாதார ரீதியில் உயர்ந்த நிலையை எட்டுவதிலும் மூலதனப் பற்றாக்குறை பெரும் தடையாக உள்ளது. கடன் பெறுவதற்கான பிணை உத்தரவாதம் கொடுப்போர் யாரும் இல்லாததால் வங்கிகளிலிருந்து இவர்களுக்குக் கடன் உதவி கிடைக்காததற்கு அடிப்படைக் காரணம். **கடன் வசதி கோரும், தகுதி வாய்ந்த, நாணயமான தொழில் முனைவோருக்கு பிணை உத்தரவாதத்தை கட்டாயப்படுத்தாமல் தடையின்றி நிதி உதவி அளிக்கும்படி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு உத்தரவிடப்படும்.**

## மகளிர்

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் தொடங்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அதிகாரம் படைத்தவர்களாக பெண்களை உயர்த்துவதில் எப்போதுமே உறுதுணையாக இருந்து வருகிறது. அவருடைய அரசியல் வாரிசாகத் திகழும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு புரட்சித் தலைவி

ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் இந்த லட்சிய முனைப்பு மேலும் வலுப்பட்டது. அரசியலில் பாலின சமத்துவத்தின் தேவையை உணர்ந்துள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 1990–களின் ஆரம்பத்திலேயே உலகிற்கே வழிகாட்டும் விதத்தில் கட்சிப் பதவிகளில் 33 சதவிகிதம் பெண்களுக்கு வழங்கப்படும் என உலகிலேயே முதல் முறையாக அறிவித்த அரசியல் கட்சி என்ற தனிப் பெருமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ளது. செல்வி ஜெயலலிதா அவர்கள் தமிழக முதலமைச்சராக வழிநடத்திய போது தான், பெண் சிசு வதையைத் தடுப்பதற்காக தொட்டில் குழந்தைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதரவற்ற பெண் குழந்தைகளை இந்தத் திட்டத்தின்படி அரசே தத்து எடுத்துக்கொண்டது. இதன் மூலம், பெண் சிசுக் கொலை என்ற சமூகக் கொடுமை வேரறுக்கப்பட்டது.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை கையாள்வதற்கென்றே அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 1992 ஆம் ஆண்டு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் அறிமுகப்படுத்தப்பட்டன. பெண்கள் மட்டுமே இடம்பெறும் அதிரடிப்படை பிரிவை அமைத்தவரும் இவர் தான். ஒருவரின் பெயருக்கு முன் ‘இனிஷியலாக’, தந்தை பெயரின் முதல் எழுத்தை மட்டுமே பயன்படுத்தி வந்ததற்குப் பதிலாக, தாயின் பெயரின் முதல் எழுத்தையோ அல்லது இரண்டையுமோ பயன்படுத்துவதற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் செய்த பெருமைக்கு சொந்தக்காரர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தான். தமிழகத்தின் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வளர்ச்சியடைவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தான் தூண்டுகோலாகவும் உந்துசக்தியாகவும் செயல்பட்டார். இதன் பலனாக, பொருளாதார சுதந்திரம் பெறுவதில் ஆண்களை விஞ்சமுடியாவிட்டாலும் கூட, அவர்களுக்கு இணையான அதிகாரம் படைத்தவர்களாக உயரும் வகையில், பெண் தொழில் முனைவோர்கள் உருவாக வழி பிறந்தது.

பல்வேறு களங்களில் பெண்கள் ஆண்களுக்கு இணையாகவோ அல்லது அவர்களை விஞ்சும் வகையில் செயல்பட்டாலும்கூட, அரசியல் களம் என்பது இன்னமும்கூட ஆணாதிக்கம் நிறைந்ததாகவே உள்ளது. நாடாளுமன்றத்திலும் மாநில சட்ட மன்றங்களிலும் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்ப, பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. உதாரணமாக, 2004 மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற மக்கள் அவை பொதுத் தேர்தலில், 14–ஆவது மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 539 வேட்பாளர்களில் பெண்களின் எண்ணிக்கை 44 மட்டுமே. இது, வெறும் 8 விழுக்காடு தான்.

**பெண்களுக்கு சம உரிமை கிடைப்பதையும், பெண்கள் அதிகாரம் படைத்தவர்களாக விளங்குவதை ஊக்குவிப்பதையும் உறுதி செய்ய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.**

- மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படும்.
- கற்பழித்தல் குற்றம் புரிபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.
- ஒவ்வொரு மாநிலத்திலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் மகளிர் நீதிமன்றங்கள் அறிமுகப்படுத்தப்படும்.
- பெண் சிசுவதையை ஒழிப்பதற்காக தொட்டில் குழந்தைத் திட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.
- அதிக அளவில் மகளிர் தொழில் முனைவோர்களாக உருவாக அதிக வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும்.

## சுற்றுலா

உலகின் பல நாடுகளில் சுற்றுலாத் தொழில் வெகு சிறப்பாக முன்னேற்றம் அடைந்துள்ளது. சுற்றுலாத் துறை சர்வதேச நல்லுறவை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் உள்ளூர் கைத்திறன் தொழில் மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில், குறிப்பாக அந்நிய செலாவணியை பெருக்குவதிலும், கூடுதல் வருவாயைப் பெருக்குவதிலும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும் சுற்றுலா முக்கியப் பங்கு வகிக்கிறது. உலக சுற்றுலா அமைப்பின் கணிப்பின்படி, உலக சுற்றுலாப் பயணிகளின் வருகையில் **0.38** சதவிகிதத்தினரை மட்டுமே இந்தியா ஈர்த்துள்ளது. இந்தியாவின் மிகப் பெரிய சுற்றுலா வளம் பெருமளவுக்கு பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிலையையே இந்தப் புள்ளி விவரம் சுட்டிக் காட்டுகிறது. பொழுது போக்கு சுற்றுலா, புனித யாத்திரை சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, சாகசச் சுற்றுலா, தொழில் – வர்த்தக சுற்றுலா, மருத்துவ சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, கல்வி சுற்றுலா, கடற்கரை சுற்றுலா, மலைப் பிரதேச சுற்றுலா போன்ற பல்வேறு சுற்றுலாத் திட்டங்களில் நாடு பின்தங்கி இருப்பதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கான ஆய்வு நடவடிக்கைகளை முடுக்கிவிட முயற்சி மேற்கொள்ளப்படும். சுற்றுலாத் துறையில் தனியார் துறையின் ஈடுபாடு பெருமளவில் ஊக்கமளிக்கப்படும். இன்னும் ஐந்து ஆண்டுகளில் சுவிட்சர்லாந்து அல்லது பிரெஞ்சு ரெவீராவைவிட மிகப் பெரிய சுற்றுலா மையமாக இந்தியா உருவெடுக்கும்.

## சேது சமுத்திரத் திட்டம்

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் கடந்த 150 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக மக்களின் கனவுத் திட்டமாக இருந்த ஒன்று. ஆரம்பத்தில் இந்தத் திட்டம் குறித்து ஆலோசனை செய்த பிரிட்டிஷார் பின்பு இதைக் கைவிட்டனர். பின்னர், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போன்ற தலை சிறந்த தலைவர்களும் கூட, தமிழகத்தின் நீண்டகாலத் தேவையை இந்தத் திட்டம் பூர்த்தி செய்யும் எனக் கருதினர். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட கனவை நனவாக்குவதாக தி.மு.க–வும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றன. ஆனால், அதிக வேகமும் மிக அதிக எடைகொண்ட சரக்குகளை ஏற்றிச்செல்லும் திறனும் கொண்ட கப்பல்கள் பயணிக்கும் இன்றைய நவீன யுகத்தில், இது தற்காலத்திற்கு ஒவ்வாதத் திட்டம் என்ற உண்மை வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால், தமிழ் நாட்டின் கடற்கரை மாவட்டங்களில் வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பறிகொடுப்பார்கள். இந்தப் பகுதியில் உள்ள அரிய வகை கடல் தாவரங்களும், உயிரினங்களும் நிரந்தரமாக அழிந்துவிடும். மேலும், இன்றைய திட்டத்தின்படி இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் ராமபிரான் இலங்கைக்கு செல்வதற்காக பாறாங்கற்களால் அமைக்கப்பட்ட ராமர் பாலம் இடிக்கப்படும் நிலை உருவாகும். சுருக்கமாகச் சொல்வதென்றால், இப்போது திட்டமிட்டுள்ளபடி இந்தக் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படுவதால், நாட்டிற்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு எந்தப் பொருளாதார ஆதாயமும் கிடைக்க வாய்ப்பே இல்லை. மேலும், இந்தத் திட்டம் சீர்படுத்த முடியாத அளவுக்கு சுற்றுச் சூழலுக்கு ஊறு விளைவிக்கும். லட்சக்கணக்கான மக்களின் வேலை வாய்ப்புகளுக்கு உலை வைக்கும். மேலும், நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தும். இந்தத் திட்டத்தால் பலனடைபவர்கள் தி.மு.க–வைச் சேர்ந்த மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு டி,ஆர். பாலு மற்றும் கருணாநிதி குடும்பத்தினர் தான். ஏராளமான பொது மக்களின் நலன்களைப் புறக்கணித்து, ஒரு தனி நபருக்கோ அல்லது தனி குடும்பத்திற்கோ பலனளிக்கும் எந்தத் திட்டத்தையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்காது. இந்தத் திட்டத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ரத்து செய்யும்.

இதற்குப் பதில், தென் தமிழகத்தில் உள்ள தூத்துக்குடியில் இருந்து சென்னை அல்லது பெங்களூருக்கு சரக்குகளை கொண்டு செல்ல மாற்று வழிகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வரும். மேலும், தூத்துக்குடி துறைமுகம் சரக்கு மாற்று துறைமுகமாக மேம்படுத்தப்படும் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி அளிக்கிறது.

## கடற்கரை மேலாண்மை மண்டலம்

பாதுகாப்புடன் வாழவும், வாழ்க்கையை அனுபவிக்கவும், தனி மனித சுதந்திரத்துடன் வாழவும், பாதுகாப்புடன் பெருந்தன்மையாக வாழவும், தூய்மையான மற்றும் பசுமையான சூழலில் வாழவும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உத்தரவாதம் அளிக்கிறது. சம உரிமை, ஏற்றத்தாழ்வு மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாக்கப்படும் உரிமை மற்றும் அடுக்கடுக்கான பல்வேறு உரிமைகளுக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. தூய்மையான, பாதுகாப்பான சூழ்நிலையில் வாழ்க்கை நடத்துவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலான உரிமையை நிலைநாட்டும் வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் **1986–ல்** இயற்றப்பட்டது. கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, **1991** என்பது சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டத்திற்கு உட்பட்ட ஒரு சட்டம் ஆகும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான அதிகார பகிர்வுடன் கூடிய கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படை அம்சத்தை மீறுவதாக இந்த அறிவிக்கை அமைந்துள்ளது. இந்த அறிவிக்கையில் இடம் பெற்றுள்ள பல விஷயங்கள் மாநில அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவை. அந்த அதிகாரங்கள் நேரடியாக மத்திய அரசால் பறிக்கப்பட்டுள்ளன. லட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்க்கைக்குப் பொறுப்பேற்றுள்ள விவசாயம் மற்றும் மீன் வளத் துறை அமைச்சகத்திடம் இந்த அறிவிக்கை குறித்து எந்த ஆலோசனையும் நடத்தப்படவில்லை. சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் கடற்கரை மேலாண்மை மண்டல அறிவிக்கை வெளியிடப்பட்டு உள்ளதாகக் கூறப்படுகிறது. மீனவ சமுதாயத்தினர் மற்றும் தங்கள் வாழ்வாதாரத்திற்காக கடல் சார்ந்த தொழில்களை நம்பியுள்ள ஏழை மக்களின் நலன்களை பலியிட்டு பெரிய தொழில் நிறுவனங்கள், சுற்றுலா மையங்கள் மற்றும் சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு மேற்படி அறிவிக்கையின் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறிவிக்கையை மறு ஆய்வு செய்யும். இந்திய நாட்டின் மிக நீளமான கடற்கரைப் பகுதியில் வாழ்க்கை நடத்தி வரும் லட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்க்கை சூழ்நிலையை அல்லது வாழ்வாதாரத்தை உருக்குலைக்கும் வகையிலான எந்த ஒரு செயலும் அனுமதிக்கப்படாது என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி அளிக்கிறது.

## வாக்காளர்களுக்கு வேண்டுகோள்

நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாத்தல், சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், பொருளாதார ஸ்திரத் தன்மை, மக்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல், நாட்டு மக்கள் அனைவரும் சமுதாயத்தில் கிடைக்கும் வசதி, வாய்ப்புகளை அனுபவிக்க வழி செய்தல் ஆகியவை அரசின் அடிப்படைக் கடமைகளில் மிகவும் முக்கியமானவை. ஆனால், தி.மு.க. முக்கிய அங்கம் வகிக்கும் மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இந்த அனைத்து கடமைகளிலும் தோல்வியைத் தழுவியுள்ளது.

தமிழ் நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போவது கண்கூடான உண்மை. அனைத்து நிலைகளிலும் அனைத்துத் துறைகளிலும் ஊழல் தலைவிரித்து ஆடுகிறது. புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒவ்வொரு துறையிலும் தலைசிறந்து விளங்கிய தமிழகம், இன்று சிறுமைபட்டு, தரம் தாழ்ந்து தத்தளிக்கிறது.

2006–ல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல், அதையடுத்த கூட்டுறவுத் தேர்தல், மதுரை மத்திய, மதுரை மேற்கு மற்றும் திருமங்கலம் ஆகிய சட்டமன்ற இடைத் தேர்தல்கள் ஆகியவற்றில் தி.மு.க. பகிரங்கமாக நடத்திய அட்டூழியங்களை நாடே கண்டது. தேர்தல் நடைமுறைகளை கேலிக்கூத்தாக்கி, ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்தையே நிர்மூலமாக்கியதால் தேர்தல் ஆணையம் மற்றும் நீதி மன்றத்தின் கண்டனத்திற்கும் திமுக ஆளானது. காங்கிரஸ் ஆதவுடன் தமிழ் நாட்டில் இன்று ஆட்சியில் நீடிக்கும் மைனாரிட்டி திமுக அரசு ஜனநாயகத்தைப் படுகொலை செய்து, குழிதோண்டிப் புதைத்துவிட்டது.

பங்குச் சந்தையில் திட்டமிட்ட ரீதியில் நடத்தப்பட்ட முறைகேடுகளால் பங்குச் சந்தை குறியீட்டு எண்ணை, இதுவரைக் காணப்படாத அளவுக்கு செயற்கையாக உயர வைத்து முதலீட்டாளர்களை சிக்க வைத்து, இறுதியில் நஷ்டத்திற்கு உள்ளாக்கியது, தொலைத் தொடர்புத் துறையில் ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீடு, அடிமாட்டு விலையில் வழங்கப்பட்டது, சேது சமுத்திரத் திட்டம் என்ற பெயரில் பெருமளவில் நிதி கபளீகரம் செய்யப்பட்டது, இயற்கை எரிவாயு ஒதுக்கீட்டிலும் ஆட்சியாளர்களின் குடும்பத்தாருக்கு சலுகை காட்டப்பட்டது ஆகியவை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் கரும்புள்ளிகள்.

இந்த நிலை மாற வேண்டும். தமிழக மக்கள், நல்லாட்சியைக் காணும் தகுதி படைத்தவர்கள். இந்திய மக்கள், சிறந்த ஆட்சி நிர்வாகத்தை அனுபவிக்கும் உரிமை உள்ளவர்கள். செயல்படுவதற்கான தருணம் இது. இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய தருணம் இது.

இதை நிறைவேற்ற, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த செயல்திட்டத்தை முன் வைக்கிறது.

இந்தியாவைப் பாதுகாக்க,

வளமான இந்தியாவை உருவாக்க,

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களியுங்கள்!

** ** **

## முதல் 100 நாட்களுக்கான அரசியல் செயல் திட்டம்

ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் 100 நாட்களுக்குள் முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காணப்படும் அரசியல் பிரச்சினைகள்:

- பயங்கரவாதத்தை முறியடிக்க வலுவான புதிய சட்டங்களை இயற்றுதல், இந்த சட்டங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் வழிவகை செய்தல்.
- ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, அரசியலமைப்பின் சட்ட வரையறைகளுக்கு உட்பட்டு பேச்சுவார்த்தைக்கு இணங்கும் பட்சத்தில், நக்ஸல் தீவிரவாதிகளின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண சிறப்பு அரசியல் உதவித் திட்டம்.
- வடகிழக்குப் பகுதியின் அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரு குழுவை அமைத்து, தனிமைப்படுத்தப்பட்டுள்ள வடகிழக்குப் பகுதி மக்களுடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்துதல். தொடர் வளர்ச்சிக்கான ஒரு சிறப்புப் பகுதியாக வடகிழக்கு மாநிலங்களை அறிவித்தல்
- சிறிய மாநிலங்கள் அமைப்பதற்கான கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்காக மாநிலங்கள் மறுசீரமைப்பு ஆணையம் அமைக்கப்படும். தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கப்படும்.
- நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, இந்திய–அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்காக ஒருமித்த கருத்து உருவாக்கப்படும். மாற்று வழியாக, அமெரிக்காவுடன் மறு பேச்சுவார்த்தை நடத்தி, இந்திய நலன்களை முழுமையாகப் பாதுகாப்பதற்குத் தேவையான ஷரத்துகளும் இந்த உடன்பாட்டில் சேர்க்கப்படும்.
- இலங்கைப் பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு அங்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் இனப் படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.
- பாகிஸ்தானுடனான உறவை மறுபரிசீலனை செய்து, இது தொடர்பாக நாட்டில் ஒருமித்த கருத்து உருவானால் மட்டுமே அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தை தொடரப்படும்.
- நதிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ள மாநிலங்களுக்கிடையே நதிநீரைப் பங்கீடு செய்துகொள்ள நிரந்தரமான ஓர் அமைப்பு ஏற்படுத்தப்படும்.
- நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்படும்.

- கச்சத் தீவு தாரை வார்த்தது தொடர்பான இந்திய இலங்கை ஒப்பந்தம் செல்லாது என்பதை அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தென் கடலோர தமிழக மீனவர்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் கச்சத்தீவு மீட்கப்படும்.
- இந்திய – ஈரான் எண்ணெய் குழாய் திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கப்படும். மாற்று வழிமுறையாக, இந்தியாவிலிருந்து விளைபொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் எண்ணெய் பெறப்படும்.
- முறையான ஆட்சி நிர்வாகத்தை, குறிப்பாக சுகாதாரம் மற்றும் கல்வித் துறையில் உறுதிப்படுத்த முக்கியமான நிர்வாக சீரமைப்பு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படும்.
- சேது சமுத்திரத் திட்டம் ரத்து செய்யப்படும்.

## முதல் 100 நாட்களுக்கான பொருளாதார செயல் திட்டம்

- வெளி நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பல்லாயிரம் கோடி அமெரிக்க டாலர் மதிப்புள்ள இந்தியப் பணத்தை, நாட்டிற்கு திரும்பக் கொண்டு வருவதற்கான உரிய நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும்.
- பங்கேற்புப் பத்திரங்களை (Participatory Notes) கண்மூடித்தனமாக விநியோகிக்கும் நடைமுறை குறித்து மறு ஆய்வு செய்யப்படும்.
- கள்ள ரூபாய் நோட்டுகள் புழக்கம் உள்ளிட்ட பண நிர்வாகம் குறித்த அனைத்துப் பிரச்சினைகளையும் கவனிக்க ஒரு குழு அமைக்கப்படும்.
- பங்குச் சந்தை முறைப்படுத்தும் அமைப்புகளான இந்திய பத்திர பாதுகாப்பு பரிமாற்ற வாரியம் (SEBI), காப்பீடு ஒழுங்கு முறை, மேம்பாட்டு ஆணையம் (IRDA), இந்திய ரிசர்வ் வங்கி (RBI), இந்தியத் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) மற்றும் இதர அமைப்புகள், எந்தக் குறுக்கீடும் இன்றி முழு சுதந்திரத்துடன் செயல்படுவது உறுதி செய்யப்படும்.
- ரயில்வே போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கானத் திட்டம் கொண்டு வரப்படும்.

- மாத ஊதியம் பெறும் மத்தியதர வகுப்பினர் வருமான வரி பிரச்சினையில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.
- மற்றவர்களுக்கான வருமானவரி உச்சவரம்பு ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.
- வரம்பு பயன் வரி (Fringe Benefit Tax) வங்கி பண மாற்ற வரி (Banking Cash Transaction Tax) ரத்து செய்யப்படும்.
- மூத்த குடிமக்கள் ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் வங்கிகளில் செலுத்தப்படும் பணத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்படும்.
- நேரடி வரிவிதிப்புக்கான மத்திய வாரியத்தின் மூலம் இந்திய–மொரீஷியஸ் இரட்டை வரிவிதிப்பு உடன்பாடும், நிதி மோசடியை ஊக்கப்படுத்தும் மற்ற உடன்பாடுகளும் மறு ஆய்வு செய்யப்படும்.
- உலகப் பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தொழில் அமைப்புகளுக்கும் சிறப்புப் பொருளாதார உதவி வழங்கப்படும்.
- வங்கிகளில் கடன் பெற்று, உலகப் பொருளாதார வீழ்ச்சியால் கடனைத் திருப்பி செலுத்த முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆலோசனையுடன் விரிவான மறுவாழ்வு உதவிகள் வழங்கப்படும்.
- சென்னையில் உச்ச நீதிமன்றக் கிளையை அமைப்பது தொடர்பாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியுடன் ஆலோசிக்கப்படும்.
- ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து உரிய புலனாய்வு அமைப்பு மூலம் விசாரணை நடத்தப்படும். ஊழல் குற்றவாளிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.
- பணம் மற்றும் பொருள்கள் மீதான யூக வணிக பேரத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்காக நிபுணர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும்.
- இந்திய சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு, குறு மற்றும் சிறு வியாபாரிகள், சில்லறை வணிகத்தில் ஈடுபடுவோர் மற்றும் மிகச் சிறிய அளவில் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுவோர் ஆகியோருக்கு மட்டும் கடன் வழங்குவதற்காக, கிராமீன் வங்கியை முன்மாதிரியாகக் கொண்டு, ஒரு வங்கி அரசால் தொடங்கப்படும்.

- வணிகர்கள் மற்றும் தொழில் முனைவோரை கலந்து ஆலோசித்த பிறகு, போட்டி சட்டம் (Competition Law) உருவாக்கப்படும்.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளுக்கு 20,000 கோடி ரூபாய் நிதியை நேரடியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நிதி, குறிப்பிட்ட உள்ளூர்த் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படும்.
- மிகவும் பின்தங்கியுள்ள 100 மாவட்டங்களில், கடன்–முதலீடு விகிதம் (Credit deposit ratio) குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தப்படும்.
- இந்திய தொழில்நுட்ப நிலையம் (Indian Institute of Technology), இந்திய மேலாண்மை நிலையம் (Indian Institute of Management) மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிலையம் (All India Institute of Medical Science) மாதிரியான நிலையங்கள் அனைத்து மாநிலத்திலும் துவங்க விரிவான திட்டம் தீட்டப்படும்.
- கூட்டு ஆலோசனை அமைப்பு (மத்திய அரசு மற்றும் தொழிலாளர் சங்கங்களின் அமைப்பு) முறையாக செயல்படவில்லை. இந்த அமைப்புக்குப் புத்துயிர் ஊட்டப்படும். அரசு ஊழியர்கள் தொடர்பான அனைத்து முடிவுகளும் பரஸ்பர ஆலோசனைகளுக்குப் பிறகே மேற்கொள்ளப்படும்.
- மத்திய அரசுப் பணிகளில் கடைநிலை ஊழியர் பணியிடங்களை (Class IV Employees) நீக்குவதில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இதனால், சிப்பாய்கள், அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், தகவல் எடுத்துச் செல்லும் பணியாளர்கள் உள்ளிட்ட அடிமட்ட ஊழியர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மத்திய அரசின் இந்த முடிவு உடனடியாக விலக்கிக் கொள்ளப்படும்.

## முதல் 100 நாட்களுக்கான விவசாய செயல் திட்டம்

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற முதல் 100 நாட்களுக்குள், முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காணப்படவுள்ள விவசாயம் தொடர்பான பிரச்சினைகள்:

- ஓராண்டுக்குள் நிறைவேற்றக் கூடிய நிலுவையில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் பட்டியலிடப்பட்டு, அவற்றை குறிப்பிட்ட காலவரையறைக்குள் முடிக்க உறுதி அளிக்கப்படும்.
- உர மானிய திட்டத்தை மேலும் பலனுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் விளங்கச் செய்ய ஒரு குழு அமைக்கப்படும்.
- எண்ணை வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்காக சிறப்பு கொள்கை அறிவிக்கப்படும்.
- **2014–ல் 300–350** மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தி இலக்கை எட்டுவதற்காக, விரிவான பசுமைப் புரட்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். உணவு தானியங்கள், பழ வகைகள், பால் பொருட்கள், கோழி வளர்ப்பு, தோட்டப் பயிர் வளர்ப்பு, மீன் வளர்ப்பு உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளிலும் உற்பத்தியைப் பெருக்க இந்தப் பசுமைப் புரட்சித் திட்டத்தில் வழி வகுக்கப்படும்.
- நாட்டின் வறட்சியான மாவட்டங்களில் நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்துவதற்காக திறமையான திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- அடுத்த ஐந்து வருடங்களில் பாசன வசதி அளிக்கப்பட வேண்டிய பகுதிகள் பட்டியலிடப்படும்.

**** ** ****